பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 26 கார்த்திகை 5 ஸபர் 26 இதழ் 279
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20-11-84

## நேற்றையயாழ்.நகரசம்பவம்: ஐந்து பொலிசார் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரதநிலையத்துக்கு அண்மையில், இரு ஜீப் வண்டியில் வந்துகொண்டிருந்த அதிரடிப்பொலிசாரை நோக்கி கைக்குண்டு வீசப்பட்டதால், ஒரு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் உட்பட 5 பேர் காயமுற்றனர். நேற்று நண்பகல் 12-00 மணியளவில் இச் சம்பவம் நடைபெற்றது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் இன்ரசிற்றி ரயிலுக்கு யாழ். புகையிரதநிலையத்தில் பாதுகாப்பளிப்பதற்குச் சென்ற பொலிசாரை நோக்கியே கைக்குண்டு வீசப்பட்டது.

இக் குண்டுவீச்சு சம்பவத்தால் கொழும்பிலிருந்து வந்த இன்ரசிற்றி ரயில் நாவற்குழி புகையிரதநிலையத்தில் தரித்து நிற்கவேண்டி ஏற்பட்டது.

காயமடைந்த சப்இன்ஸ்பெக்டரும், நான்கு பொலிசாரும் சிகிச்சைக்காக ஆஸ்பத்திரிகளுக்குக் கொண்டுசெல்லப்பட்டனர்.

உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் குகனேஸ்வரன் யாழ் ஆஸ்பத்திரியிலும் மற்றும் நான்கு பொலிசாரும் குருநகர் இராணுவமுகாமுக்கும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட

(11ம் பக்க 4ம் கலம் பார்க்க)

# குண்டுவெடிப்புச் சம்பவம்: இராணுவ உயர் அதிகாரி பலி!

## தாக்குதலைத் தொடர்ந்து வீடுகள், வாகனங்கள் தீக்கிரை

(ஏ. வி. மாணிக்கம்)

தெல்லிப்பளைச் சந்திக்கும் கட்டுவன் சந்திக்குமிடையேயுள்ள வறுத்தலைவிளான் என்னுமிடத்தில் பிரதான வீதியில் புதைத்துவைக்கப்பட்டிருந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் கவசவண்டிகள்சகிதம் ஜீப் வாகனத்தில் சென்றுகொண்டிருந்த யாழ். மாவட்ட இரண்டாவது பாதுகாப்பு அதிகாரியும், பலாலி இராணுவமுகாம் அதிபருமான கேர்ணல் ஆரியப்பெருமா பலியானுர். மற்றும் ஐந்து இராணுவவீரர்கள் படுகாயமடைந்துள்ளனர்.

படுகாயமடைந்த இராணுவ வீரரில் இருவர் அபாயகரமான நிலையில் உள்ளதாகவும், அவர்கள் சத்திர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் கொழும்பு ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.

நேற்றுக்காலை 11-05 மணியளவில் இக்குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றது.

பலாலி இராணுவ முகாமிலிருந்து, இரு கவச வண்டியிலும், ஒரு ஜீப்வண்டியிலும் இராணுவத்தினர் தெல்லிப்பளை நோக்கிச் சென்றுகொண்டிருந்ததாகவும், பின்னர் தெல்

(11ம் பக்கம்ப்ம் கலம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம்: இருவரைக் காணவில்லை!

[யாழ்ப்பாணம்]

கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தின்போது ஒரு இளைஞரையும் இளம்பெண் ஒருவரையும் காணவில்லையெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். தபால் அலுவலகத்தில் கடமையாற்றும் சோ. சந்திரகுமார்(26 வயது) (கல்வியங்காடு) என்பவரையும், இளம்பெண் ஒருவரையும் காணவில்லையாம். (மா)

## 16 வயது இளைஞரும் பலி!

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆயுதப்படையினரின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த கந்தசாமி சிவசுப்பிரமணியம்(45 வயது) என்பவரும், கோப்பாய்-வடக்கைச் சேர்ந்த சதாசிவம் மணிமாறன்(16 வயது) என்பவரும் பலியானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். ஆஸ்பத்திரியில் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த இருவரின் சடலங்களும் நேற்றுக்காலை அடையாளம் காணப்பட்டது.

பிரேத பரிசோதனையின்பின்னர் நேற்றுப்பிற்பகல் உறவினரிடம் இரு சடலங்களும் கையளிக்கப்பட்டுள்ளன.

(மா)

## மன்னுரில் பதற்றம்! காடுகளில் 'வேட்டை'

(மன்னுர்)

மன்னுர் வெள்ளாங் குளத்தில் இளைஞர் விவசாய அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்காக மன்னுர் கச்சேரி அதிகாரிகள் நேற்றுக் காலை 'ஜீப்'களில் சென்றுகொண்டிருந்தபோது, வெள்ளாங்குளத்திற்கும் விடத்தல் தீவுக்குமிடையில் சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் றிவோல்வரைக் காட்டி ஜீப்பபை வழிமறித்தனர்.

இந்த இளைஞர்கள் இருவரும் தாடியுடன், சாரமும் சேர்ட்டும் அணிந்திருக்கக் காண பட்டனர்

மன்னுர் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் சென்ற இந்த ஜீப்பில் மன்னுர் மாவட்ட அமைச்சரின் செயலாளர் ஜனுப் கே அக்பரும் பிரயாணம் செய்தார்

(11ம் பக்கம் 4ம் கலம் பார்க்க)

## வண. பிதா சிங்கராயர் பிணை மனு நிராகரிப்பு

(கொழும்பு)

வணபிதா ஆபரணம் சிங்கராயரை பிணையில் விடுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட பிணைமனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிணைமனு மீதான விசாரணையில் கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி டி. ஜி. ஜயலத் மேற்படி தீர்ப்பை வழங்கினுர்

அவரை பிணையில் விடுவிப்பதற்கு இந்த நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என்றும் கடந்த ஆண்டு ஜுலை மாதம் அப்பீல் நீதிமன்றம் விதித்திருந்த தீர்ப்புக்கு எதிராக இந்த நீதிமன்றத்தினுல் தார்ப்பு வழங்க முடியாது என்றும் மேற்படி தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரச அதிபரின் ஜீப் கடத்தல்

யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு அரசாங்க அதிபரின் ஜீப் வண்டி நேற்று முன்தினம் இனந்தெரியாத நபர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

முள்ளியவளை என்னுமிடத்தில் வைத்து இந்த ஜீப்வண்டி கடத்தப் பட்டதாகப் புகார் செய்யப்பட்டது (மா

## கிளிநொச்சியில் தீவைப்பு சம்பவம்!

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கடந்த இரண்டு தினங்களாக இடம்பெற்ற ராணுவத் தேடுதலின்போது குடிசை ஒன்றிலிருந்து 2 இளைஞர்கள் கைது செய்யப்பட்டதுடன் குடிசையும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

ராமநாதபுரத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தைத் தொடர்ந்து வட்டக்கச்சிப்பகுதியில் பதட்டம் நிலவுகிறது.

இதே வேளை மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டி

(11ம் பக்கம் 3ம்கலம் பார்க்க)

## பெற்றோல் நிலையத்தில் ரூ.63,000 கொள்ளை

(மட்டக்களப்பு)

அக்கறைப்பற்றுச் சந்தியிலுள்ள பெற்றோல் நிலையம் இனம் தெரியாத பதினெரு மூகமூடி அணிந்த இளைஞர்களினுல் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது .63 ஆயிரம் ரூபா பணம் நேற்றுமுன்தினம் இரவு மேற்படி நிலையத்தில் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இரவு 12-30 மணியளவில் பெற்றோல் நிலையத்தில் புகுந்த இளை

(12ம் பக்கம் 3ம் கலம்பார்க்க)

## திருமலையில்நேற்று நடந்த சோதனை

### பலர் மீது தீவிர விசாரணை

(திருகோணமலை)

திருகோணமலை பஸ் நிலையத்திலும் அதனைச் சுற்றிய பகுதியிலும் நேற்று முன்தினம் மாலை ஆயுதப்படையினர் கடுமையான சோதனையிட்டனர்.

பஸ்களில் வந்து இறங்கியவர்களையும், அங்கு நின்றவர்களையும் சோதனை செய்து அடையாள அட்டை இல்லாதவர்களை விசாரணைக்கு அழைத்துச் சென்றனர்.

## வரிப் பணம் ரூ.12,000 கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ் மாநகரசபையின் களியாட்டவரி உத்தியோகத்தரிடமிருந்து வரிப்பணமான சுமார் 12 ஆயிரம் ரூபா இனந்தெரியாத நான்கு இளைஞர்களினுல் துப்பாக்கி முனையில்

[12-ம் பக்கம் 3-கலம் பார்க்க)

## தமிழ்நாட்டில் புயல்

### 41 பேர் பலி

(சென்னை)

தமிழ் நாட்டில் அண்மையில் ஏற்பட்ட கடும் புயலினுலும் மழையினுலும் செங்கல்பட்டு மாவட்டத்தில் 41 பேர் பலியாகியுள்ளனர். பலகோடி ரூபா பெறுமதியான பொருட்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது.

## வரி விளம்பரம்

### தேவை

தனியார் ஆங்கில மருத்துவ மனைக்கு நேர்மையும், அனுபவமும் உள்ள தாதி உடன் தேவை. தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். நேரிலோ கடிதமூலமோ விண்ணப்பிக்கவும். சாந்தி வைத்தியசாலை, யாழ். வீதி, கிளிநொச்சி. 783

கைக்கடிகாரம் திருத்துவதில் பலவருட அனுபவமுள்ளவர்கள் தேவை. அனுபவத்திற்கேற்ற சம்பளம் வழங்கப்படும். டில்க்கா வாச் வேக்ஸ் 404 1/4 ஆஸ்பத்திரி வீதி, பஸ் நிலைய முன்பாக யாழ்ப்பாணம். 799

### வாடகைக்கு

யாழ். நகரில் 3500 ச. அடி விஸ்தீரணமான கதவுகளால் மூடிய இணைக்கப்பட்ட சேமிப்பு அறை வாடகைக்குண்டு. தொழிற்சாலைக்கு அல்லது களஞ்சிய சேமிப்புக்கு உகந்தது. தொடர்பு: திரு. மகேந்திரன் மேர்ச்சன்ட் பிறின்ஸ் லிமிடெட், யாழ்ப்பாணம். 790

சுண்டுக்குளி பக்கா ஒழுங்கையில் நான்கு படுக்கை அறைகளைக் கொண்ட புதிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: திரு மகேந்திரன், மேர்ச்சன்ட் பிறின்ஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 791

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தில்

சொத்துரு தியில்லாது காலஞ்சென்ற புங்குடுதீவு வட்டாரம் 6, கந்தசாமி லோகநாதனின் மரணச் சொத்துக்கள் தொடர்பிலான விடயம் சம்பந்தமாக.

— காலஞ்சென்றவர்

ஆறுமுகம் கந்தசாமி 6ம் வட்டாரம், புங்குடுதீவு.

— மனுதாரர்

வழக்கு இல: தத்துவம் /96

எதிர்

1. ஆறுமுகம் கந்தசாமி பெண் செல்லம்மா,
2. கந்தசாமி தவலோகநாதன்,
3. கந்தசாமி கலைச்செல்வி
4. கந்தசாமி அருட்செல்வி
5. சோமு இராசதுரை
6. இராசதுரை பெண் நளினி
7. கந்தசாமி புனிதகுமார் (தனது வழக்குப் பாதுகாவலரான 1ம் எதிரானி ஆறுமுகம் கந்தசாமி பெண் செல்லம்மாமூலம் தோற்றுகின்றார்) எல்லோரும் வட்டாரம் 6 புங்குடுதீவு.

—எதிர் மனுதாரர்கள்

மேலே உள்ள இலக்கங் கொண்டமரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985ம் ஆண்டு தை மாதம் 9ந் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோற்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப் படுகின்றார்கள்.

1984ம் ஆண்டு கார்த்திகை மாதம் 15ந் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி,
A. NADARAJAH
பதிவாளர்.

வரைவு:
எஸ்.ஏ.ஈ. ஏகநாதன்
மனுதாரின் சட்டத்தரணி. 795

## நேர்மைக்குப் பாராட்டு

(ஊரெழு)

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் கண்டெடுத்த இன்னொருவருக்குச் சொந்தமான கொடுப்பனவுக் கட்டளை யொன்றை காங்கேசன்துறை மக்கள் வங்கி கிளை முகாமையாளரிடம் ஒப்படைத்த குரும்பசிட்டியைச் சேர்ந்த திரு. முசுந்தரராஜாவின் நேர்மையையும் பொறுப்புணர்வையும் மக்கள் வங்கிக் கிளை முகாமையாளர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்.

மேற்படி கொடுப்பனவுக் கட்டளை ரூபா 50,000 பெறுமதியானது என்றும் அது எம் சோதிநாதன் என்பவரின் பெயருக்கு எழுதப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


### றீகல் மினி தியேட்டர்.
(றீகல் சினிமா கட்டிடம்)

21-11-84 முதல் குதூகல ஆரம்பம்.

காட்சி நேரங்கள்: 10-15, 2-00, 4-30.

சிவாஜி, பாக்கியராஜ், ராதிகா ......

**தாவணிக் கனவுகள்**

குறிப்பிட்ட ஆசனங்கள் மட்டுமே

பிரவேசம்: 7-00 ரூபா மட்டுமே. (810)


## மலையகத்திலுள்ள தொண்டர் ஆசிரியர்களுக்கு ஜனவரி முதல் நியமனம்

(யாழ்ப்பாணம்)

மலையகத்திலுள்ள பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றியவர்களுக்கு (க.பொ.த பத்திரம் பெற்றவர்கள்) 85 ஜனவரி முதல் நியமனம் வழங்கல்வி அமைச்சர் சம்மதித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆசிரியர் காங்கிரஸ் தலைவர் திரு எம் எஸ். செல்லச்சாமி தலைமையிலான குழு ஒன்று கல்வி அமைச்சரைச் சந்தித்து மலையக உட்பட தமிழ் ஆசிரியர்களின் பிரச்னைகள் சம்பந்தமாகப் பேச்சு வார்த்தை நடத்தியது.

இக்குழுவில் இ.ஆ காங்கிரஸ் உபதலைவர் திரு எஸ் நவரட்ணம், பொதுச் செயலாளர் திரு. க. சிவஞானம் ஆகியோர் அடங்கியிருந்தனர்.

தொண்டர் ஆசிரியர்களாக மலையகத்தில் கடமையாற்றியவர்களுக்கும் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியவயது கூடிய தொண்டர் ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்க உடனடியாக மந்திரி சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளப் போவதாகவும் அமைச்சர் தூதுக்குழுவினருக்கு உறுதியளித்துள்ளார்.

மலையகப் பகுதிக்குப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட 1000 ஆசிரியர்களுக்கு 85 ஜனவரிதொடக்கம் நியமனம்வழங்கப்போவதாகவும், அவர்களுக்குப் பிரத்தியேகமான பயிற்சிநெறி அளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். இவர்களுக்குப் போட்டிப் பரீட்சை அடிப்படையில் நேர்முகப் பரீட்சை நடைபெற்றது தெரிந்ததே. [மா]

## இயக்குநர் சபை கூட்டம்

(வண்ணார்பண்ணை)

நீண்ட காலங்களின் பின் பனை அபிவிருத்திச் சபையின் இயக்குநர் சபைக் கூட்டம் கொழும்பில் கூடவிருக்கிறது. இம்மாதம் 24ம் திகதி நடைபெறவிருக்கும்இந்தமாதாந்தக் கூட்டம் பிரதேச அபிவிருத்தி அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற விருக்கிறது.


## பேராதனை, கொழும்பு, ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகங்களின்

[வெளிநிலை]

### விரிவுரைகள்

கல்வியாண்டு 1985 / 86

இலங்கை பல்கலைக்கழகங்களின் வெளிநிலை பாடநெறிகளான

* கலைமாணி
* விஞ்ஞானமாணி (புள்ளிவிபரவியல்)
* சட்டமாணி
* வணிகமாணி

க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விபரங்களையும் விண்ணப்பப்பத்திரத்தினையும் ரூபா 5/– செலுத்தி நேரில் / தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 30-11-1984

விபரங்களுக்கு:
உதவிப்பதிவாளர்,

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(803)


## ஏழாவது ஆண்டு நினைவஞ்சலி

திருமதி செல்வநாச்சி செல்வரத்தினம்

(முன்னாள் ஆசிரியை உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)



நமது குடும்பத்தில் மந்திரியாய், மாதுமியாய், சேவகனுய் வாழ்ந்த உமது நினைவுகள் நமது இதயத்தின் இறுதித் துடிப்பிலும் கலந்திருக்கும். உயிரையும் உடலையும் ஜரணிக்க முடிந்த இந்த உலகத்தால்-உமது நினைவுகளை ஜீரணிக்க முடியவில்லை

தூய்மையான உமது உறவால் பரிணமித்த நினைவுகள் வெறும் மணல் மேடுகளல்ல-காலத்தால் வளர்ந்த மலைக்குன்றுகள்.

உமது ஆத்மா சொர்க்கத்தில் நித்தியம் பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்

அன்புக் குடும்பத்தினர்

செல்வகிரி,
உடுப்பிட்டி. 805


## SCIENCE ACADEMY

யாழ்ப்பாணம்.

### A/L 85 புதிய வகுப்புக்கள்

ஆரம்பமாகின்றன.

### DAY CLASS

ஐந்து நாட்கள் காலை 8-00 தொடக்கம் 12-00 வரை

### மீட்டல் DAY CLASS

ஐந்து நாட்கள் 9-00 தொடக்கம் 1-00 மணி வரை

புதிய சனி / ஞாயிறு பிரிவு

ஆரம்பம்: 24-11-84 சனி 8-30 மணி

| | |
|---|---|
| மின்னியல் | — சுந்தர் |
| பௌதிகஇரசாயனம் | — சத்திஸ் |
| தூயகணிதம் | — வெக்டர் |
| பிரயோக கணிதம் | — வெக்டர் |
| வெப்பவியல் | — சிறீ |
| விலங்கியல் | — தம்பிராசா |
| தாவரவியல் | — சர்வா |
| பொது இரசாயனம் | — தில்லைநாதன் |
| காபன் | — சண் |

Paper Class ஆரம்பம்: 1–12–84



## வெளிநாடு செல்வதற்கு

* விமான டிக்கட்:

விசேட கட்டணத்தில் லண்டன், பரிஸ், சிங்கப்பூர், மலேசியா

SPECIAL FARE TO LONDON, PARIS, SINGAPORE AND MALAYSIA

Attractive fares to European Countries U. S. A., Canada and Australia.

* அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை

வார நாட்களில் காலை 8 30 முதல் 4 30 வரையும், சனிக்கிழமைகளில் காலை 9-00 முதல் நண்பகல் 12-00 வரையும் பெற்றுக் கொள்ளலாம்.

BUY YOUR AMERICAN EXPRESS TRAVELLERS CHEQUES ANYTIME BETWEEN 8-30 AND 4-30 ON WEEK DAYS AND ON SATURDAYS BETWEEN 9-00 A.M. — 12-00 NOON

* விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகலபிரயாண தேவைகளுக்கும்

இன்றே நாடுங்கள்

## மக்கினேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண்: 92 போன்: 24154



# "தமிழக சட்டசபை தேர்தல் எம்.ஜி.ஆரைஎதிர்த்துதி.மு.க. எவரையும் நிறுத்தமாட்டாது"



### — கருணாநிதி அறிவிப்பு

சென்னை, நவ. 19

எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் தமிழக முதலமைச்சரும், அ தி.மு.க. ஸ்தாபகருமான திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு எதிராக வேட்பாளர் எவரையும் நிறுத்தப்போவதில்லை என்று தி.மு.க. தலைவர் திரு. மு.கருணாநிதி அறிவித்துள்ளார்.

திரு. எம். ஜி. இராமச்சந்திரனை எதிர்வரும் தமிழக சட்டசபைத் தேர்தலில் தமது வேட்பாளர்கள் எவரும் எதிர்த்துப் போட்டியிடமாட்டார்கள். என்று திரு கருணாநிதி அறிவித்துள்ளபோதிலும், ஏனைய தொகுதிகள் அனைத்திலும் அ. தி. மு. க வேட்பாளர்களுடன் தி. மு. க. போட்டியிடும் என்று அவர் கூறினார்.

திரு. மு கருணாநிதி, எதிர்வரும் தேர்தலில் ஜனதா, கம்யூனிஸ்ட் கட்சிகளுட்பட ஏனைய பிரதானஇந்திய எதிர்க் கட்சிகளுடன் தி மு க கூட்டுச் சேர்வது குறித்துத் தீர்மானிக்குமென்றும் கூறினார்.

இதேவேளை திரு. எம். ஜி; ஆர். நியூயோர்க் 'புறாக்ளின் மருத்துவமனையில் துரிதமாக சுகமடைந்துவருகிறார். தேர்தல் ஏற்பாடுகள் குறித்து சிறிதுசிறிதாக அவருக்கு தெரிவக்கப்பட்டு வருகிறது.

தமிழக சட்டசபைத் தேர்தலிலும், தொடர்ந்து இந்திய லோகசபைத் தேர்தலிலும் இந்திராகாங்கிரஸ் கட்சியுடன் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம் கூட்டுச் சேர்ந்து போட்டியிடும் என்று நிதியமைச்சர் இரா நெடுஞ்செழியன் அறிவித்துள்ளார் [கி]

---

## ஆந்திராவில் வீசிய புயல் 191 பேர் மரணம்

(ஹைதராபாத்)

ஆந்திரப் பிரதேச கடும் புயலில் இதுவரை 191 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லூர் மாவட்டத்திலுள்ள 200 கிராமங்கள் இன்னமும் தொடர்புகள் துண்டித்த நிலையில் இருக்கின்றன.

இப்பகுதி மக்களுக்கு விமான மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்படுகின்றன.

---

### நோர்வேயிலுள்ள

## சீக்கிய ராஜதந்திரியை இந்தியா அழைக்க முடிவு

புதுடில்லி, நவ. 19

நோர்வேயிலுள்ள முன்னாள் இந்திய ராஜதந்திரியான சீக்கியரை இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பும்படி இந்திய அரசு நோர்வே அரசைக் கேட்டுள்ளது

இந்த சீக்கிய ராஜதந்திரி மறைந்த இந்தியப் பிரதமரின் கொலையுடன் சம்பந்தப்பட்டுள்ளார் என்று இந்திய அரசு கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டது

இவர் இந்திய வெளிநாட்டுச் சேவையிலிருந்துகடந்த 'பொற்கோயில்' முற்றுகைக்குப் பின்னர் தமது பதவியை ராஜினாமாச் செய்தார்.

தொடர்ந்து நோர்வே அரசிடம் தமக்கு அந்நாட்டிலேயே அரசியல் புகலிடம் தரும்படி அவர் கேட்டுக்கொண்டு அங்கு வாழ்ந்துவருகிறார்.

இந்திராவின் கொலைகுறித்து தாம் அதிர்ச்சியடைந்துள்ளதாகவே இந்த சீக்கிய ராஜதந்திரி குறிப்பிட்டுள்ளார். [க]

---

## நாயாறு கொலை வழக்கு ஜனவரி 15ல் விசாரணை

[வவனியா]

நாயாறு அந்தோனிப்பிள்ளை யேசுராஜா அல்லது இந்திரன் கொலைவழக்கில் எதிரியான மோசஸ் அன்ரனிக்கு வவனியா மேல் நீதிமன்றத்தால் குற்றப்பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. அக் குற்றப்பத்திரத்தில் எதிரி இறந்தவரை 1980-ல் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது. இவ் வழக்கு விசாரணை 15-01-1985-ல் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் சுருக்க விசாரணை நடைபெற்று மேல் நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தப்பட்டுள்ளது

எதிரி சார்பில் ஏற்பட்ட சட்டத்தரணி திரு. கனகமனோகரன் ''இந்த எதிரி ஒரு பரம ஏழை.'' இந்த நீதிமன்று இவரை இரண்டாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதி வழங்கி மூன்று வருடங்ளாகியும் இவர் பிணைத்தொகையினைச் செலுத்தமுடியாது தொடர்ந்தும் நான்கு வருடங்களாக விளக்கமறியலில்

(9-ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

---

### எதியோப்பிய பட்டினி

## எலும்புக்கூடான மக்கள் உயிருடன்புதைக்கப்பட்டனர்

அடிஸ் அபாபா. நவ. 19

எதியோப்பியாவில் கடும்பட்டினியால் பாதிக்கட்டுள்ள மக்கள் மிகப் பயங்கரமான நடவடிக்கைகளுக்குள்ளாகின்றனர்.

எதியோப்பியாவின் காட்டுப்பகுதி கிராமங்களிலேயே பட்டினி பெரும் சேதத்தை ஏற்படுத்தியுள்ளது. நகரப்புறங்கள் பெருமளவில் பாதிக்கப்படவில்லை.

இதனால் கிராமங்களிலிருந்து நகர்ப்பகுதிகளுக்கு 'எலும்புக்கூடுகள்' படையெடுப்பதுபோல் எலும்பும் தோலுமான கிராமவாசிகள் லட்சக்கணக்கில் வந்தவண்ணமுள்ளனர்.

இவ களின் வருகையைக் கட்டுப்படுத்தும்வகையில் நகர்ப்பகுதிகளின் பாதுகாப்புப்படைகள் மூர்க்கத்தனமாகச் செயற்படுகின்றனவாம்.

பட்டினியால் வாடும் இம் மக்களைப் பெரும் லொறிகளில் போட்டுச் சென்று பெயர் குறிப்பிடபடாத ஒதுக்குப்புறப்பகுதிகளில் பெரும் குழிகளில் போட்டு உயிருடனேயே மூடிவிடுகின்றனவாம்.

தற்போது பெருமளவு உதவிகளும், சர்வதேச உதவி நிறுவனங்களும் எதியோப்பியாவிலுள்ள தால் இக்கொடுமைகள் நீங்கியுள்ளன என்று கூறப்பட்டது.

எதியோப்பிய பட்டினி நிலை தொடர்ந்து மோசமாகவே உள்ளது. நூற்றுக் கணக்கான குழந்தைகள் பெற்றோரை இழந்து அனாதைகளாகியுள்ளனர். (கி)

---

## 'இந்திரா சர்வதேச அமைதி' பரிசுவழங்க முடிவு!

### புதிய விமான நிலையத்துக்கு 'இந்திரா' பெயர்

புதுடில்லி, நவ. 19

இந்திரா காந்தியின் 67-வது பிறந்ததினத்தைக் குறிக்கும் வகையில் 'இந்திரா சர்வதேச அமைதிப் பரிசு' ஒன்றை இந்திய அரசு வழங்கமுன்வந்துள்ளது.

இப்பரிசு சர்வதேச ரீதியில் உலக அமைதிக்காக துணிச்சலுடன் ஈடுபடுவோருக்கு வழங்கப்படும்

இந்திரா பிறந்ததினத்தைக் குறிக்கும் வகையில் பல விரிவான ஏற்பாடுகள் இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது

புதுடில்லியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் புதிய சர்வதேச விமானநிலையத்துக்கு 'இந்திரா காந்தி' விமான நிலையம் என்று பெயர்சூட்டப்படும்.

புதுடில்லியில் 1982-ம் ஆண்டு 'ஆசியாட்' விளையாட்டுகளுக்காக நிர்மாணிக்கப்பட்ட 'இந்திரப் பிரஸ்தா' உள்ளக விளையாட்டரங்கிற்கு இந்திரா காந்தியின் பெயர் சூட்டப்படும்.

இதேவேளை திருமதி காந்தியின் பிரமாண்டமான உருவச் சிலை ஒன்றும் புதுடில்லியில் அமைக்கப்படும்

திருமதி இந்திரா காந்தியின் பிறந்ததினத்தைக் குறிக்கும் வகையில் புதுடில்லி 'தீன் மூர்த்தி பவனில்' இந்திரா காந்தியின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் புகைப்படக்கண்காட்சி ஒன்று நடத்தப்படுகிறது.

இக்கண்காட்சி 'பிரியதர்ஷினி என்ற பெயரில் சிறுபராயம் முதல் இறுதியாக அவர் கொல்லப்பட்ட நிகழ்ச்சி வரையிலான படங்களைக் கொண்டிருக்கும். (கி)

---

## பிரபல கேடி கொலை வழக்கு: பிணையில் எதிரியை விட அனுமதி

(வவனியா)

வவனியா - இளமருதன் குளம் பிரபல சுமணதாச கொலைவழக்கின் சந்தேக நபரான உக்குராலகே குணசேகரா 5000 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல வவனியா மேல்நீதிமன்றம் வவனியா நீதவானுக்கு அறிவித்தல் அனுப்பியுள்ளது.

இறந்தவரை எதிரி தாக்கி கொலை செய்ததாக வவனியா பொலிசார் தக்கல் செய்த வழக்குவவனியா நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

வவனியா மேல் நீதிமன்றத்தில் எதிரி குணசேகரா சார்பில் அவரது மனைவியான தமிழ் பெண் சரஸ்வதி தாக்கல் செய்த பிணை மனுவை ஆதரித்த சட்டத்தரணி திரு. கனகமனோகரன் தெரிவித்ததாவது:

''கொலை செய்யப்பட்ட சுமணதாஸ பல குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர் அவர் ஒரு கசிப்புவியாபாரி. அவரது கசிப்பு வியாபாரம் பற்றி பொலிசுக்கு தகவல் கொடுத்தது தனது மைத்துனரான எதிரி ஆக இருக்கவேண்டும் என்று சந்தேகத்தில் நள்ளிரவில் இன்னொருவருடன் எதிரி வீட்டுள் நுழைந்து அவரைத் தாக்க எத்தனித்துள்ளார் எதிரி தற்பாதுகாப்பிற்காக மேற்கொண்ட தாக்குதலில் சுமணதாச இறந்துள்ளார்.

மேல் நீதிமன்றத்தில் ஆஜரான உதவிப் பொலிஸ் பரிசோதகர் திரு கணபதிப்பிள்ளை இது தற்பாதுகாப்பின் நிமித்தம் நிகழ்ந்த கொலை என்பதை ஒப்புக்கொண்டார் அரசதரப்பு சட்டத்தரணி திரு ஸ். சிறீஸ்கந்தராஜா ஒப்பிணை மனுவை தான்அங்கீகரிப்பதாக தெரிவித்ததனை அடுத்து மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ஜே. ஜி ஆசீர்வாதம் பிணை உத்தரவினை பிறப்பித்தார்.

---

## "தீவிரவாத சக்திகளை முறியடிப்பேன்!"

### சீக்கிய குழுக்களிடம் ரஜீவ்

புதுடில்லி, நவ. 19

'தீவிரவாதிகளை ஒரு போதும் நான் அனுமதிக்க மாட்டேன்.' என்று புதியஇந்தியப்பிரதமர் திரு ரஜீவ் காந்தி கூறியுள்ளார்.

திரு காந்தியை நேற்று புதுடில்லியில் பம்பாய், பட்னா ஆகிய இடங்களைச் சேர்ந்த இரு சீக்கிய குழுக்கள் சந்தித்தன. அவை திருமதி இந்திரா காந்தி கொலை செய்யப்பட்டது குறித்து தமது கவலையை வெளியிட்டன. இத்துடன் பிரதமர் ரஜீவின் எதிர்காலப் பணிகளுக்கு பூரண ஒத்துழைப்புத் தருவதாகவும் குறிப்பிட்டன.

இந்த இரு சீக்கிய குழுவினரிடையே பேசியபோதே திரு. ரஜீவ்காந்தி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் கூறியதாவது:

''தீவிரவாத சக்திகள் நாட்டுக்கு விரோதமானவை. அவற்றின் நடவடிக்கைகள் முன்னேற்றங்களைத்தடுப்பவையாகும். எனவே நாட்டுக்கும், மக்களுக்கும் எதிரான தீவிரவாத சக்திகளை நான் முறியடிப்பேன்'' என்று கூறினார். (கி)

### மணிவாக்கு

அடுப்புக்கரி தன்னளவில் கன்னங்கரேலென்று கிடக்கிறது. ஆனால் அதைத் தீயுடன் சேர்த்தால் அது தேஜோ மயமாகத் திகழ்கிறது. மனம் அது போன்றது.

— அருள்விருந்து

## நமது நோக்கு

# ஆபிரிக்காவில் பட்டினி அழிவு

நாமிந்தச் சிறு குடா நாட்டில் துப்பாக்கி ஒலியின் தொடர் கதையை நிறுத்த முடியாது திகைக்கிறோம்.

திகைப்பு மட்டுமல்ல; அதனைப்பற்றி ஓயாது பேசிக்கொண்டுமிருக்கிறோம்; இதற்கு முடிவு எட்டத்தில் என்று நினைக்கவேண்டியிருக்கிறது.

கொழும்புப் பாராளுமன்றம் விடயத்துக்கு உதவாததால் வேறு வழி என்ன என்பதில் சந்தேகம் நிலவுகின்றது.

எமது இளைஞர்களின் எதிர்காலத்தை நாம் சிந்தியாமல் இருக்கவில்லை; ஆனால் தவறான வழியில் திசை திருப்பப்படுகிறவரை எவ்வாறு தப்பவைப்பது?

போராட்டம் மூலமே எமது வாழ்வின் மேம்பாடு கிட்டுமென்று சத்தியம் செய்து கொண்டவரை இங்கு வாழும் பொதுமக்கள் எவ்வாறு கணிக்கின்றனர்?

அரசாங்கம் 'பயங்கரவாதம்' ஒழிக்கப்படவேண்டும் என்று சங்கற்பம் செய்து கொண்டு அத்திசையில் ராணுவ நடவடிக்கையில் தீவிரப்படுவதால் இப்பகுதி மக்கள் பாதுகாப்பு, அவர்களின் நல்வாழ்வுக்குரிய தேவைகள் எவ்வாறு நிறைவேற்றப்படலாமென்ற ஆலோசனைக்குத் தக்க தலைமைத்துவம் தேவை.

இந்த நிலையில் சீரழிந்து கொண்டிருக்கும் சமூகத்துக்கு ஆபிரிக்காவில் லட்சக்கணக்கான மக்கள் பட்டினியால் மடிந்து கொண்டிருப்பது ஒரு வெறும் வெளிநாட்டுச் செய்தி போல் தோன்றும்.

அந்த நிலையிலிருந்து நாம் ஒருபடி உயர்ந்து ஒரு சமுதாய மனச்சான்றுடைய மக்களாக மதிப்புப் பெற்றால் எங்கள் நாட்டுக்கும், சமுதாயத்துக்கும் விடிவு உண்டு.

ஆபிரிக்க நாடுகள் இன்றைய ஆராய்ச்சியின்படி பண்டைக்காலத்தில் பண்பட்ட மக்களாக வாழ்ந்ததாக வரலாறு கூறுகிறது. இதனை நம்புவதற்கு இந்தியாவே சான்றளிக்கின்றது. வறுமையால் உருக்குலைந்த மக்களின் கண்ணில் ஒரு தூரகால ஒளி இருப்பதை ஆராய்ச்சி நிபுணர் ஏற்றுக்கொள்கின்றனர்.

நாம் குறிப்பிடும் பண்பாடு இன்றைய விஞ்ஞான உலகுக்கேற்ற, மேனாட்டு நாகரிக சாயலைக் கொண்டதல்ல; இயற்கையோடு இசைந்த வாழ்வில் ஈடுபட்ட ஆபிரிக்க மக்கள் வேறு இடங்களிற் கிடையாத விலைமதிப்புடைய மூலப்பொருள்களைத் தம் நாட்டில் கண்டனர்.

மேனாட்டுத் தொழிற்புரட்சி, ஏகாதிபத்தியப் போர், - இவை போன்ற தாக்கங்களுக்கு அடிமையான ஆபிரிக்க நாடுகள் செல்வத்தின் மத்தியில் ஏழைகளானார்கள்.

இன்று சுதந்திரம் கண்ட இன்னும் பூரண சுதந்திரத்துக்குப்போராடும் நாடுகள், வெள்ளையரின் ஆதிக்கம் மட்டுமல்ல சுதந்திர ஆட்சியிலேயே வறுமை வாழ்வில் தொடர்கின்றன.

பட்டினி ஒழிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் ஐ, நா. வின் கிளை ஸ்தாபனங்கள், ஆபிரிக்க நாடுகள் கடும் வறட்சியால் பீடிக்கப்பட்டிருக்கும் போது உணவுத்தட்டுப்பாடு அங்கு வாழும் கோடி மக்களை வாட்டும் என்பதை அறிந்திருக்கவேண்டும்.

எனவே இன்று நிகழ்ந்து கொண்டிருக்கும் லட்சக்கணக்கான பட்டினி மரணம் தக்கநேரத்தில் தடுத்து நிறுத்தப்படாதது உலக சமுதாயத்தின் மனச்சான்றுக்கு மாறாத இழுக்கென்பதில் ஐயமில்லை.

குறிப்பாகபாதிக்கப்பட்ட நாடுகள் இதியோப்பியாவும் சுடானுமாகும். உதவிகிட்டுமுன் சுமார் எழுபது லட்சம் மக்கள் பட்டினியாலும், நோய் தாங்கமுடியாக் குளிர் காரணத்தாலும் பெருந்தொகையில் மடிகின்றனர்

உலகின் பல பாகங்களில் இன்றைய தொழில் நுட்ப முன்னேற்றம் எண்ணற்ற குபேரர்களை உற்பத்திசெய்திருக்கிறது. விருத்தியடைந்த நாடுகள் இந்தக் கண்ராவிக்கு உதவ முன்வரவில்லை.

எங்கள் நாட்டை எண்ணிப் பார்த்தால், சுதந்திர ஆட்சியில் பெரும்பான்மை மக்கள் வறுமையில் வாடுவதும், ஒரு சிறுகூட்டத்தினர் ஆடம்பர வாழ்க்கையில் இன்புறுவதும் நன்றாகப் புரியும்; இந்த 'பிரபுத்துவ' கூட்டமே ஜனநாயக ஆட்சியின் பலவீனங்களைப் பயன்படுத்தி தமது ஆதிக்கம் தொடர்வதற்கு காலாகின்றனர்.

இந்த நாட்டில் பட்டினியால் எவரும் சாவதில்லை என்று பாராளுமன்றத்தில் பலத்துப் பேசப்பட்டிருக்கிறது; அதில் உண்மை உண்டு. ஆனால் வறுமை வாழ்வில் வாடும் மக்கள் விடிவுகாண்பதெவ்வாறு என்று தத்தளிக்கின்றனர்.

ஆபிரிக்க பிரதேசங்களில் ஏற்பட்ட வறட்சி இங்கு நிகழுமானால் அந்தத் துன்பியல் நாடகம் விடாது நடத்தப்படும்.

# தமிழ்நாடு சட்டசபை தேர்தல் களம்

தமிழகச் சட்ட சபைப் பதவிக் காலம் 1985 ஜூன் மாதத்துடன்தான் முடிவடைகிறது. பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்காலம் 1985ஜனவரியுடன் முடிவடைகிறது. ஆனாலும் முற்கூட்டியே தேர்தல் நடக்கிறது.

இந்தியாதான் இந்திரா என்று அரசியல் இருந்த நிலையில் இந்திராஜி படுகொலை செய்யப்பட்டதும் அவர் தம் அருமை மகன் ரஜீவ் காந்தி பிரதமரானார். அரசியலுக்குப் புதியவரானாலும் அரசியல் பாரம்பரியத்தில் வளர்ந்த ரஜீவ் பிரதமரானதும் தாயார் மறைந்து 15 நாட்களில் இந்தியப் பொதுத் தேர்தலை நடாத்த முடிவு செய்திருப்பது சிறந்த ஜனநாயக மரபாகக் கருதப்படுகிறது'

தமிழகத்தில் இன்று பாராளுமன்றத் தேர்தல்களுடன் தமிழக சட்டசபைத் தேர்தலையும் நடத்த மத்திய அரசின் அனுமதியும் கிடைத்துவிட்டது. மக்கள் திலகம் எம். ஜி. ஆர் அமெரிக்காவில் பாயும் படுக்கையுமாக நோயுற்றிருக்கும் நேரத்தில் தமிழகத் தேர்தல் நடைபெற இருக்கின்றது. இதுவரை நடந்த பொதுத் தேர்தல்களில் மிகச் சூடுபிடித்திருக்கும் தமிழகத் தேர்தலில் நீயா? நானா? போட்டிதான் தலைஎடுத்துள்ளது

யல் மிக நீளமாக இருக்கின்றது.

ஆனால் தமிழக அரசியல் அண்ணாவுக்குப் பின்னர் அ,இ அ.தி.மு.க விடமும், தி.மு.க விடமும்தான் நீயா நானா போட்டியில் சிக்கிக் கிடக்கிறது.

வேதயக் கட்சிகள் என்று சொல்லிக் கொண்டிருப்பவர்கள் எல்லா மாலங்களிலும் எங்கள் கட்சி இயங்குகின்றதென மார்தட்டுபவர்களும் இந்த இரு கட்சிகளிடமும்தான் சரணடையப் போகிறார்கள்.

அ.இ,அ.தி.மு.க் விடம் தேசியக் கட்சியும், ஆளும் கட்சியுமான இந்திரா காங்கிரஸ் தேர்தல் உடன்பாடு செய்துள்ளது. தமிழகச் சட்டசபையில் அ.இ.அ.தி.மு.க மூன்றில் இரண்டு ஸ்தானங்களை வைத்துக்கொண்டு எஞ்சியவற்றை தோழமைக் கட்சிகளுக்குக் கொடுக்கப்போகிறது

1980 தேர்தலில் இந்திரா காங்கிரஸ் தி.மு.க தேர்தலில் ஒன்றுசேர்ந்து 24 இடங்களைத் தட்டிக்கொண்டது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

1984 தேர்தலில் இந்திரா காங்கிரஸ் அ.இ.அ.தி.மு.க வுடன் சேர்ந்திருக்கிறது சமீபத்தில் நடந்த மாநில சட்டசபைத்தேர்தலில்அ இ.தி.மு.க ஓரிடத்தையும் இந்திரா காங்கிரஸ் ஓரிடத்தையும் கைப்பற்ற (கூட்டுச் சேர்ந்து) திமுக இரு இடங்களில் வெற்றியீட்டியதை நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

1980ல் தமிழக முதலமைச்சர்களில் எவருக்கும் கிடைக்காதசெல்வாக்கு எம்.ஜி ஆருக்குக்கிடைத்தது. ராமாவரம் தோட்டத்திலும் ஆற்காடு தெருவிலும் அவரது இருப்பிடங்களைத் தேடி மொரார்ஜி வந்தார்; ஜெக ஜீவன்ராம் வந்தார். மதுலிமயே வந்தார். பட்நாயக் வந்தார் வாஜ்பாய் வந்தார். சி சுப்பிரமணியம் வந்தார். சந்திரசேகர் வந்தார், மதுதண்டவதே வந்தார். அர்ஸ் வந்தார். அகில இந்திய நட்சத்திரங்களெல்லாம் நட்சத்திர முதலமைச்சரைத் தேடி வந்தார்கள்.

இடது கம்யூனிஸ்டுகளும் வலது கம்யூனிஸ்டுகளும் "வகுப்புவாத கட்சிகளோடு கூட்டு வைத்திருக்கிற கூட்டணிகளுடன் கூட்டுச்சேர மாட்டோம்" என்று கூறியவர்கள்எம் ஜி.ஆரிடம்அடைக்கலம் புகுந்தார்கள், "தொகுதிகளைப்பற்றி எவரும் கவலைப்படவோ' தெரிவு செய்யவோ தேவையில்லை பொறுப்பை என்னிடம் விட்டுவிடுங்கள்" என்று சொல்லி சட்டசபைத் தேர்தலில் வெற்றிமேல் வெற்றிகளைக் குவித்தார்.

எம் ஜி. ஆர் அமெரிக்காவில் படுத்த படுக்கையிலிருந்து தமிழகத்தேர்தல் தொகுதியில் ஜெயிக்க முடியும். ஆனால் தேர்தல் களத்தில் குதிக்க முடியாது. இது இன்று தமிழக மக்களுக்குத் தெரியும். எம். ஜி. ஆர் இடத்தை இன்று அ. இ. அ. தி. மு.வில் இரா. நெடுஞ்செழியனால் நிரப்ப முடியாது. கவர்ச்சி நடிகரின் காலமும் மேற்கு நோக்கி நகர்கிறது.

பலகாலமாக பாடுபார்த்திருக்கும் கலைஞர் இந்தத் தேர்தலிலை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டிருக்கிறார். எம் ஜி. ஆர் இந்திராகூட்டணியை எப்படியும் முறியடித்துக் காட்ட வேண்டுமென்று கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறார். கம்யூனிஸ்டுகளும் முஸ்லீம் லீகும் ஏனைய உதிரிக் கட்சிகளும் கருணாநிதியின் திறமை மீதுஅபார நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். இவர்களைக் காட்டிலும் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் இன்று ஈசிக் செயர் சித்தாந்தத்தை முறியடித்து முண்டியடித்து முன்னுக்கு நிற்கிறார். கலைஞர்

எது எப்படியானாலும் தமிழக சட்டசபைத் தேர்தல் பாராளுமன்றத் தேர்தல் நீயா நானா என்ற பலப்பரீட்சையில் இருகழகங்களுமே இறங்கியுள்ளன.

## புத்தொளி

தமிழகத்தில் மாநிலத் தேர்தலில் 6 1/2 கோடி மக்கள் தமது வாக்குகளைப் போட இருக்கிறார்கள். இம் மக்கள் கையிலேயே தேர்தல் முடிவுகள் இருக்கின்றன.

1972ல் எம்.ஜி. ஆர் தி.மு.க விலிருந்து விலக்கப்பட்டார். அன்று எம்.ஜி ஆரின் சத்தியா ஸ்ரூடியோ அல்லோலகல்லோலப்பட்டது. அண்ணாவுக்குப் பின் கலைஞர் ஆட்சி கொடி கட்டிப் பறந்தது. அந்த நேரத்தில் திடுதிப்பென்று எம். ஜீ. ஆர் தி.மு.க விலிருந்து விலகி புதிய கட்சியாக அ.தி.மு.கவைத் தொடங்கினார் அன்று சத்தியா ஸ்ரூடியோவில் எம்.ஜீ ஆர் போட்ட அரசியல் அடித்தளம் இன்று கோட்டை கொத்தளமாக நிமிர்ந்து நிற்கிறது.

தமிழகத்தில் கொள்கை கோட்பாடுகளுக்கு குறைவுண்டோ இல்லையோ கட்சிகளுக்கு மட்டும் குறைவில்லை.

அகில இந்திய கட்சிகள் என்ற பெயரில் பல கட்சிகள் தமிழகத்தில் பிராந்தியக் கட்சிகளாக 'பிராஞ்சுசகளை' வைத்திருக்கின்றன, வலது கம்யூனிஸ்ட் இடது கம்யூனிஸ்ட், போர்வட்பிளக். முஸ்லீம் லீக், குடியரசுக் கட்சி, பாரதீய லோக்தள், ஜனதா, இந்திரா காங்கிரஸ், காங்கிரஸ் எஸ், காங்கிரஸ் ஜே, புதிதாக நிறுவப்பட்ட டி.எம்.கே.பி சமீபத்தில் அ.இ.தி.மு,க விலிருந்து விலகிய எஸ் டி சோமசுந்தரம் கட்சி, காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் என்றெல்லாம் கட்சிகளின் பட்டியல் மிக நீளமாக இருக்கின்றது.

# 'ஒடுக்கப்பட்ட மக்களுக்கு குரல் கொடுத்தவர்"

[மானிப்பாய்]

"அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களுக்காக குரல் கொடுத்தவர் இந்திரா காந்தி" என்று மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் திரு எஸ். வி. மகேசவேல் கூறினார்.

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்திக்கு இங்கு அஞ்சலிக்கூட்டம் நடந்தது இந்த அஞ்சலிக் கூட்டத்தில், அதிபர் திரு எஸ் வி. மகேசவேல் மேலும் பேசுகையில் கூறியதாவது:- "புகழ் பூத்த குடும்பத்தில் தோன்றிய இந்திரா மோதிலால்நேருவைப் பேரனாகவும், ஜவர்ஹலால் நேருவைத் தந்தையாகவும் கொண்டு தியாகசிந்தையும், பேராற்றலும் உடையவராகத் திகழ்ந்தார். அஞ்சா நெஞ்சத்துடனும், உறுதியான மனப்பாங்குடனும் இந்தியாவின் ஒற்றுமைக்காகவும் வளர்ச்சிக்காகவும் அயராது பாடுபட்டார்.

"அணிசேரா இயக்கத்தின் தலைமைப்பதவியைத் திறம்பட வகித்ததோடு அமையாது இந்துசமுத்திரத்தைச் சமாதானப் பிராந்தியமாக்குவதற்கு அரும்பாடுபட்டார்."

இலங்கையின் இனப்பிரச்னைக்கு ஆக்கபூர்வமான அரசி

(9-ம் பக்கம் 1ம்கலம்பார்க்க)

## மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன்

# அனாதைச் சிறார்களைப் பராமரிக்க உதவி கோரப்படுகிறது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இராமகிருஷ்ணமிஷன் பராமரிப்பிலுள்ள அனாதை இல்ல சிறார்களை பராமரிக்க வசதிபடைத்தவர்கள் பொதுமக்கள் உதவிமிஷன் நிர்வாகத்தால் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்லடி உப்போடை இராமகிஷ்ண மிஷன் சுவாமி ஜீவானந்தாஜீ பொதுமக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் ஒன்றில் குறிப்பிட்டுள்ளதாவது.

கல்லடி உப்போடை 104, காரைதீவு 31, ஆனைப்பந்தி 33 என 168 சிறார்கள் மிஷனால் பராமரிக்கப் படுகின்றார்கள், இவர்களில் 80பேருக்கு மட்டும் அரசாங்கத்தினால் மாதம் 50 ரூபா வழங்கப்படுகின்றது. மிகுதி 88பேர் மிஷன் பராமரிப்பிலுள்ளார்கள்.

ஒருவரை பராமரிக்க மாதாந்தம் 200ரூபாய் செலவு ஏற்படுகின்றது. இந் நிலையில் மாதாந்த மொத்த செலவு 7-10 ஆயிரம் ரூபாய்வரை ஏற்படுகின்றது.

இந்நிலையில் 75சதவீத உதவி பொதுமக்களிடமிருந்து பெறப்படவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

# 300 தமிழ் இளைஞர்கள்

## டென்மார்க்கில் அரசியல் தஞ்சம்

[க. ஜீவகதாஸ்]

இலங்கையில் இடம்பெற்ற இனக்கலவரங்களைத் தொடர்ந்து சுமார் 300 தமிழ் இளைஞர்கள் தற்போது டென்மார்க்கில் அரசியல் தஞ்சம் கோரித் தங்கியுள்ளனர்.

இவர்களுள் 75 வீதமானோர் இங்கிருந்து நேரடியாக டென்மார்க் சென்றவர்கள் எனவும், மீதமான 25வீதத்தினர் ஏனைய ஐரோப்பிய நாடுகளில்இருந்து டென்மார்க் சென்றவர்கள் என்றும் தெரியவந்துள்ளது.

இத்தமிழ் இளைஞர்களுக்கான உணவு, இருப்பிட வசதிகளை அந்நாட்டில் இருக்கின்ற சமூக சேவை இயக்கங்கள் வழங்கி வருவதாகவும், அதே நேரத்தில் டென்மார்க் அரசாங்கம் இவர்களது பிரச்னைகள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி இன்னமும் கவனத்துக்கு எடுத்துக்கொள்ளவில்லை எனவும் அறியப்படுகின்றது.

இவ்வாறு அரசியல் தஞ்சம் கோரியுள்ள தமிழ் இளைஞர்கள் தமது நிலைமைகளை, அந்நாட்டிலுள்ள, சமூக சேவை ஸ்தாபனங்கள் ஊடாக உயர் மட்டங்களுக்கு தெரியப்படுத்தி உள்ளன என்றும் தெரிகின்றது.

அரசியல் தஞ்சம் கோரி இப்போது யாரும் அங்கு செல்வது தவிர்க்கப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது.

---

### சுயவேலைவாய்ப்பை ஊக்குவிக்கும்

## கல்வி மூலவள நிலையம்

[கோப்பாய்]

''கடமையைக் கடமையாகச் செய்கின்ற அரச ஊழியர்களும், கடமையைத் தொண்டாகச் செய்கின்றவர்களும், கடமையைச் சரிவரச் செய்யாதவர்களும் என அரச ஊழியர்கள் பலதரப்பட உள்ளனர். இவர்களில் கடமையைத் தொண்டாகச் செய்பவர்களே பொதுமக்களின் மதிப்பையும் அபிமானத்தையும் பெறுகின்றனர்''

இவ்வாறு கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தின் புதிய காரியாலயத்தை திறந்துவைத்துப்பேசிய திரு. சபாநாயகம் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், ''கோப்பாய் கல்வி மூலவளநிலையம் பாடசாலை மாணவர்களோடு, இளைஞர், யுவதிகளுக்கும் பிரயோசனமான சேவையைச் செய்வதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. கல்விகற்கும் மாணவர்களுக்கு ஊக்குவிப்பதும், பாடசாலை விட்டு நீங்கியோருக்கு சுயவேலைவாய்ப்புக்கும், சமூகசேவைக்கும் வழிவகுத்துக் கொடுப்பதையும் தன் இரு கண்களாகக்கொண்ட கோப்பாய் கல்விமூலவள நிலையத்திற்கு யாழ். கல்வித் திணைக்களத்தின் ஆசிகளை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்'' என்று கூறினார்.

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்த வளவில் அமைந்த கோப்பாய் கல்வி மூலவள நிலையப் பணிமனைத் திறப்புவிழா நிகழ்ச்சிகள் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரியும், கோப்பாய் கல்விமூலவள நிலையத் தலைவருமாகிய திரு. ஆ. வ. தங்கராசா தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் திருமதி சரோஜினி கணேந்திரன் பேசுகையில்; ''திட்டமிட்டுச் செய்யப்படும், காரியங்கள் வெற்றியையேஅளிக்கின்றன தோல்வியாகும் செயற்பாடுகள் திட்டமிடப்படாதவை என்பது வெளிப்படை. ஆனல் கோப்பாய் கல்வி மூலவள நிலையத்தின் செயற்பாடுகள் யாவும் வெற்றியளிப்பனவாக இருப்பது, அங்கு காரியங்கள் திட்டமிட்டு ஒழுங்காகச் செய்யப்படுவதையே காட்டுகின்றது'' என்று கூறினார்.

பனைஓலையினல் இழைக்கப்பட்ட சரத்தினல் அலங்கரிக்கப்பட்ட காரியாலயத் திறப்பு விழாவில் யாழ் திட்டமிடல் அதிகாரி திரு வி. எஸ் சுவாமிநாதன், முன்னள் மாவட்ட சபைத் தலைவர் திரு ந இராஜேந்திரன் புத்தூர் சோமஸ்கந்த கல்லூரி அதிபர் திரு. எஸ். ஆர். சண்முகரத்தினம், முன்னள் பிரதேச சபைத்தலைவரும், சட்டத்தரணியுமான திரு. சதா. லோகேஸ்வரன், கோப்பாய் கல்விமூலவள நிலையப்பொறுப்பதிகாரி திரு. எஸ் சி. எஸ். சிதம்பரநாதன் ஆகியோர் உரையாற்றினர். சேவைக்காலப் பயிற்சி ஆலோசகர் திரு. ஐ. ஜெகநாதன் சில புத்தகங்களை நிலைய நூலகத்திற்கு அன்பளிப்புச் செய்தார்.

---

# மாதகல் பகுதியில்

## ஆலயங்களில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

மாதகல் பகுதியில் கடந்த சில நாட்களாகத் திருட்டு, வழிப்பறிச் சம்பவங்கள்நடைபெற்றுவருவதால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

கோவில்களில் உள்ள திருப்பணி உண்டியல் பெட்டிகள் இரவு வேளைகளில் உடைக்கப்பட்டு பணம் திருடப்படுகிறதாம்.

மாதகல்அரசடிப்பிள்ளையார் கோவில் பாணுவெட்டி அம்மன் கோவில், காஞ்சிபுரம்வைரவர் கோவில் திருப்பணிஉண்டியல் பெட்டிகள் இதுவரை உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதியில் அடிக்கடி திடீர் திடீர் என ஆயுதப் படையினர் ரோந்து சேவைஆற்றியபோதிலும் திருட்டு வழிப்பறிச்சம்பவங்கள் நடைபெறுவது விந்தையாக இருப்பதாக மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள். (மா)

---

## உபகரணங்கள் கொள்ளை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சபையின் வட்டுக்கோட்டை உப அலுவலகம், மின்சார சபை உப அலுவலகம் ஆகியவற்றிலிருந்து பெறுமதி மிக்க மின்சார வயர்களையும் மற்றும் இரும்பிலான உபகரணங்களையும் இனந்தெரியாத நபர்கள் கொள்ளை அடித்துச் சென்றதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

வானென்றில்வந்த கோஷ்டியினரே காவலாளிகளை துப்பாக்கிமுனையில் பயமுறுத்திவிட்டு கொள்ளை அடித்தனராம். (மா)

---

## பழுதடைந்த நிலையில் மடம்

[சுழிபுரம்]

சுழிபுரம் திருவடி நிலையில் வீதிக்கு அருகாமையாகவுள்ள தகனக் கிரியைசெய்யும் மடம் மிகவும் பழுதடைந் அபாயகரமான நிலையில் இருக்கின்றது.

எந்தநேரம் இடிந்து விழும் என்று சொல்லமுடியாமல் கூரை மரங்கள் முறிந்த நிலையில்காணப்படுகிறது.

---

## இன்றைய பலன்

மாதம் கார்த்திகை 5-ந் திகதி (20-11-1984) செவ்வாய்

மேடம்: தாம்பத்திய வாழ்வில் மகிழ்ச்சிகரமான சம்பவங்கள் இடம்பெறும், களஸ்திரவழியால் பொருள் வரவிற்கும் இடமுண்டு.

இடபம: சிறு விடயங்களுக்குக்கூட அதிக ஆத்திரப்படுவீர்கள், வீணை சந்தேகங்கள் தோன்றக்கூடும், சிந்தித்தபின் செயலாற்றவும்.

மிதுனம்: மனம் போல் வாழ்வு இன்று மலரும், கடமையாற்றுமிடத்தில் சக தொழிலாளர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும், பிதாவழி சுகக்குறைவிற்கும் இடமுண்டு.

கடகம்; தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றத்திற்கு வழி கோலப்படலாம், இதன்மூலம் பதவியில் உயர்வும் கிடைக்கலாம்.

சிங்கம்; எண்ணத்தில் மாற்றமும் எதிர்பாராத வரவும் உண்டு, பேச்சுவார்த்தையின் மூலம் விபரீதத்திற்கும் இடமுண்டு, எவ்விடயத்திலும் அமைதியுடன் இருக்கவும்.

கன்னி: இன்று எவ்விடயத்திலும் விழிப்புடனிருக்கவும், வாகனச்சாரதகளாயின் அதிக கவனம் வேண்டும், உடல்நலக்குறைவிற்கும் இடமுண்டு.

துலாம்: எதிலும் விரக்தி மனப்பான்மை தென்படும், எதிர்பார்த்த முடிவுகளில் ஏமாற்றம் உருவாகலாம், உடல்நலமும் பாதிக்கப்படலாம்.

விருச்சிகம்: தொழில் புரியுமிடத்தில் கருத்துவேற்றுமைகள் தோன்றக்கூடும், கொடுக்கல்வாங்கல்கள் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள்.

தனுசு: எதிலும் அவசரம், கோபம் தென்படும், சகோதர வழி சஞ்சலம் ஏற்படும், தற்பெருமையைத் தவிர்த்துக் கொள்ளவும்.

மகரம்: அன்னை வழி ஆதரவு தாராளமாக கிடைக்கும், அறிஞர்களின் தொடர்புகளும் கிடைக்கலாம், பொருள் வரவிற்கும் இடமுண்டு.

கும்பம்: அறவழியில் மனம் நாடும், தாராள மனப்பான்மை மூலம் பணமும் செலவாகும், இளைய பிள்ளையால் மகிழ்ச்சி உண்டு

மீனம்: பிரயாணத்தில் பொருள் நழுவக்கூடும், நம்பிக்கை வைப்பதன மூலம் பணம் பறிபோகலாம், புதிய தொழில்களை இன்று பின்போடவும்.

திருமலை

வே.ரவீந்திரன்

---

# உழவு இயந்திரம் கடத்தப்பட்டது

(கிளிநொச்சி)

ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனத்தில் கடமையிலிருந்த நாலாவது உழவுயந்திரமும் துப்பாக்கி ஏந்திய இனம்தெரியாத இளைஞர்களால் கடத்தப்பட்டுள்ளது.

இக்கூட்டுத்தாபனத்தில் மூன்று உழவுயந்திரம்கொள்ளையடிக்கப்பட்டு, இதுவரை மீட்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதொடர்பாக பொலிசாரால் விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்ட உழவு யந்திர சாரதிகள் விசாரணையின் பின் விடுவிக்கப்பட்டனர்.

### வான் கையளிப்பு

இதேவேளை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்பாக கணேசபுரம் வீதியில் அநாதரவாக மிகவும் சேதமடைந்த நிலையில் கிளிநொச்சி பொலிசாரால்மீட்கப்பட்ட 'டட்சன்' மஞ்சள்நிற வானிற்கு வவுனியா பெருந்தெருக்கள்திணைக்களத்தினர் உரிமை கோரியதையடுத்து நீதிமன்ற உத்தரவின்பேரில் திணைக்கள அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

பிரஸ்தாப வாகனம் வவுனியாவில் இருந்து முருகண்டி நோக்கிவரும்போது இடையில் எதிர்ப்பட்ட ஆயுதம் தாங்கிய இனம்தெரியாத இளைஞர்களால் கடந்தமாதம் கடத்திச் செல்லப்பட்டது

பின்னர் இவ்வாகனம் இம்மாதம் 7ம் திகதி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்பாக நொருங்கிய நிலையில் அநாதரவாக நின்று மீட்கப்பட்டது.

### கண்டனம்

இது இவ்வாறு இருக்க கிளிநொச்சி மாவட்டத்தில் அப்பாவிகளான இளைஞர்கள் கைதாவதை கிளிநொச்சி பத்திரிகையாளர் வாசகர் நலன் புரிச் சங்கத்தினர் கண்டித்து தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளனர்

கைதான இளைஞர்களின் விபரங்களை திரட்டுவதிலும் இவர்களை விடுவிக்கும் முயற்சியிலும் கிளிநொச்சி பிரஜைகள் குழு முயற்சிகள் மேற்கொண்டுள்ளதாக பிரஜைகள் குழு உபதலைவர் சட்டத்தரணி சிறீஸ்கந்தராசா, பொருளாளர் ப. வை. ஜெயபாலன் ஆகியோர் தெரிவித்தனர்.

---

# யாழ். மாவட்டத்தில் உர வாரம்

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்டத்தில் எதிர்வரும் 19-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் உரவாரம் அனுஷ்டிப்பதற்கான ஒழுங்குகள் யாழ். திட்டமிடல் உதவிப் பணிப்பாளரினல் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த உர வாரத்தை முன்னிட்டு யாழ் மாவட்டத்திலுள்ள சகல உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் கருத்தரங்குகள் நடாத்தப்படவுள்ளன.

''யாழ். விவசாயிகளும் உர பாவனையும்'', ''உர வழங்கலும் அதன் உபயோகமும்'' என்னும் பொருள்பற்றி கட்டுரைப் போட்டியொன்றை நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவில்

(அச்சுவேலி)

விவசாயிகளிடையே உரப் பாவனையின் முக்கியத்துவத்தை உணர்த்தும் முகமாக திட்டமுலாக்கல் அமைச்சின் தேசிய உரச்செயலகம் நேற்று முதல் 24ந் தி.தி வரையான காலப்பகுதியில் தேசிய உர வாரத்தை நடத்தத் தீர்மானித்துள்ளது.

இதனை முன்னிட்டு யாழ். திட்டமிடல் செயலகத்தின் அனுசரணையுடன் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மூன்று இடங்களில் சிறப்பு வைபவங்களும், கருத்தரங்கும் இடம்பெற இருக்கிறது

இன்று 20ம் திகதி காலை பத்தமேனி இரத்தினேஸ்வரி வித்தியாசாலையிலும், 22ம் திகதி காலை நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியிலும், பிற்பகல் உரும்பராய் கமநல சேவை நிலையத்திலும் நடைபெறும் இவ்வைபவங்கள் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு கிட்ணர் தலைமையில் இடம் பெறும்.

இதற்கான ஏற்பாடுகளை கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவு விசேட சேவை அலுவலர்கள் மேற்கொண்டுள்ளனர்.

### நெடுந்தீவில்

[நெடுந்தீவு]

திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கீழ் தேசிய பசளை செயலகத்தின்மூலம் தாவரங்களுக்கு பசளை பாவிப்பை சகல இடங்களிலும் ஊக்கப்படுத்த பரவலான முறையில் பிரசாரத்தை மேற்கொள்ளும் முகமாக இம்மாதம் 19ம்திகதி தொடக்கம் 24ம் திகதிவரையிலான நாட்களை தேசிய பசளை வாரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சகல மாவட்டங்களிலும் பசளை பாவனைபற்றிய பலவித நடவடிக்கைகள் இதுதொடர்பாக தொடங்கப்பட்டுள்ளன.

மாவட்ட ரீதியில் பசளை வாரத்திற்குள் எடுக்கப்படும் நடவடிக்கைகள் அந்தந்த மாவட்டங்களின் அரசாங்க அதிபர் தலைமையில் அப்பகுதி திட்ட அமுலாக்கல் பிரிவின் பிரதிப்பணிப்பாளரினல் அல்லது உதவிப் பணிப்பாளரினல் ஏற்படுத்தப்படும்.

விவசாய அபிவிருத்திக்கு பசளை பாவித்தலின் முக்கியத்துவம், உரிய காலத்தில் உரிய அளவு பசளையிட்டால் ஏற்படும் பலாபலன்கள் மற்றும் கிராமிய மட்டத்தில் போதிய அளவு பசளைகளைக் கொடுப்பதில் உள்ள முக்கியத்துவம் பற்றி உரிய ஸ்தாபனங்கள் தேவையான விளக்கங்களைக் கொடுக்கும்.

தேசிய பசளை வாரக் கருத்தரங்குகள் அவ்வப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினலும் மேற்கொள்ளப்படவுள்ளன

---

## வாழ்க்கைச் செலவுப்படி

(உடுவில்)

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டது போன்று 102 ரூபா விசேட வாழ்க்கைச் செலவுப்படி சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலைசெய்யும் சகல ஊழியர்களுக்கும் வழங்கப்படவுள்ளது

சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நிர்வாக சபைக் குழுவினர் தலைவர் திரு. சி. குமாரவேலு தலைமையில் கூடி. நவம்பர்மாதச் சம்பளத்துடன் இப்பணத்தையும் சேர்த்து சுன்னுகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் வேலைசெய்யும் சகல ஊழியர்களுக்கும் வழங்குவதென முடிவுசெய்துள்ளனர்,

# மன்னாரில் தங்கிய அகதிகள் கிளிநொச்சியில் குடியமர்வு

[மன்னார்]

கடந்த வருடம் ஜூலை மாதம் இடம் பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு தற்போது மன்னார் மாவட்டத்தில் தங்கியிருக்கும் அகதிகள் குடும்பங்கள் அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் குடியமர்த்தப்படவுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் தற்போது நானாட்டானில் 19 குடும்பங்களும், தட்சணா மருதமடுவில் 38 குடும்பங்களும் அகதிகளாகத் தங்கியிருக்கின்றனர்

இவர்கள் அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முழங்காவில், வன்னேரிக் குளம் ஆகிய இடங்களில் குடியமர்த்தப்படுவார்கள்.

இவர்களுக்கு அரசாங்கத்தினால் நீர்ப்பாசனத்துடன் கூடிய ஒரு ஏக்கர் நெற் காணியும், ஒன்றரை ஏக்கர் மேட்டு நிலக் காணியும் வங்கப்படும். இத்துடன் இவர்கள் அகதிகள் புனர்வாழ்வுத்திட்டத்தில் குடியமர்த்தப்பட்டதும் வயது வந்தவர்களுக்குத் தலா 150 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும், குழந்தைகளுக்கு தலா 75 ரூபா பெறுமதியான உணவுப் பொருட்களும் மூன்று வாரத்திற்கு வழங்கப்படும்.

இதனைத் தொடர்ந்து 18 மாதங்களுக்கு பங்கீட்டுப் பொருட்கள் வழங்கப்படும்.

இவர்களுக்கு லீட்ஸ், சர்வோதயம், செடெக், இளைஞர் கிறிஸ்தவ மன்றம் ஆகிய இயக்கங்கள் ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடமைக்க 12 ஆயிரம் ரூபாவும், கிணறு அமைக்க 10 ஆயிரம் ரூபாவும் வழங்கவுள்ளன. இத்துடன் தற்காலிகக் குடிசை அமைக்கவும், விவசாய உபகரணங்கள், முட்கம்பி, பயிர்ச் செய்கைக்குத் தேவையான பொருட்கள் போன்றவற்றைக் கொள்முதல் செய்வதற்கென ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 4,500 ரூபாவீதம் வழங்கவுள்ளன.

அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின்கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறும் அகதிகள் குடும்பங்கள் தமக்கு வழங்கப்படும் மேட்டு நிலக் காணியில் 3 வார காலத்திற்குள் தற்காலிகக் குடிசைகளை அமைத்து அபிவிருத்தியில் ஈடுபடவேண்டும்.

அகதிகள் புனர்வாழ்வுத்திட்டத்தின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் குடியேறும் அகதிகள் குடும்பங்களின் புனர்வாழ்வுப் பொறுப்பை லீட்ஸ், சர்வோதயம், செடக், இளைஞர் கிறிஸ்தவ மன்றம் ஆகிய இயக்கங்கள் பொறுப்பேற்கும்.

## “ஆனந்தபுரம் கிராம மக்கள் பிரச்னைகளை தீர்த்துவைப்பேன்”

### கிளிநொச்சி அரச அதிபர் கூறுகிறார்

(கிளிநொச்சி)

“கிளிநொச்சி நகரத்திற்கு அடுத்தாக அமைந்திருக்கும் ஆனந்தபுரம் கிராம மக்கள் எதிர் நோக்குகின்ற பிரச்னைகளைத் தீர்த்துவைத்து, நிரந்தரப் புகலிடம் வழங்க சித்தமாக உள்ளேன். அத்துமீறிய குடியேற்றங்களின் பிரச்னைகளை தீர்த்து வைக்கும்போது பலவித சிக்கல்கள் தோன்றும் அவற்றை மக்கள் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டால் சுபீட்சமான வாழ்வு அமையும்.”

இவ்வாறு கிளிநொச்சி ஆனந்த புரத்தில் கிராம முன்னேற்றக் சங்க ஆதரவுடன் மரம்நடுகை இயக்கமொன்றை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து சிறப்புரையாற்றுகையில் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திரு. என். ஜெயநாதன் குறிப்பிட்டார்.

வைபவத்திற்கு பிரஸ்தாப சங்கத் தலைவரும், தொழில் அதிபருமான திரு. பிச்சைமுத்து தலைமைவகித்தார்.

கிளிநொச்சி மாவட்ட மரம் நடுகை இயக்க அமைப்பாளரும் காணி அதிகாரியுமான திரு சுப்பிரமணியம் வைபவத்திற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

பிராந்திய வனபரிபாலன அதிகாரி திரு. எஸ் வேலாயுதபிள்ளை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். ஆனந்தபுரம் கிராம முன்னேற்றச் சங்க செயலாளர் திரு. பி. சிற்றம்பலமும் உரையாற்றினார்.

## நியமனம்

(சாவகச்சேரி)

அச்சுவேலியிலுள்ள கிராம அபிவிருத்திப் பயிற்சிக்கல்லூரியின் பொறுப்பதிகாரியான திரு. பி. ஜே. அருள்நாயகம் இம்மாதம் முதலாம் திகதி முதல் யாழ். மாவட்டகிராம அபிவிருத்தி உதவிப்பணிப்பாளராக மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. அருள்நாயகம், கைதடி அகதிகள் முகாம் இணைப்பாளராகவும் பணிபுரிகின்றார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## குளங்கள் திருத்தும் பணி ஆமை வேகத்தில்! பொது மக்கள் புகார்

(வவனியா)

கடந்தமாரி மழையின் போது வவனியா மாவட்டத்தில் உடைப்பெடுத்த குளங்கள் திருத்தும்பணி ஆமை வேகத்தில்நடந்ததினால் இன்னமும் பலகுளவேலைகள் உள்ளதாக பொதுமக்கள் புகார் தெரிவித்துக் கொள்கின்றனர்.

குளவேலைகளில் ஊழல்கள் நடந்திருப்பதாக அண்மையில் வெளிவந்த பத்திரிகைச் செய்தி குறித்து வவனியாமாவட்ட அமைச்சர் வவனியா கச்சேரியில்உள்ள உயர் அதிகாரி ஒருவரிடம் வினவியுள்ளார்.

குளவேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிசரியான முறையில் பயன்படுத்தப்படவில்லை என்பதுதான் பொதுமக்களின் புகாராகவுள்ளது

இதுபற்றி கமநலசேவை பகுதிஅதிகாரி ஒருவரிடம் வினவியதும் எல்லாவேலைகளும் சரியான முறையில் இடம் பெறுவதாக கூறுகின்றார்.

## பாராளுமன்றத்தில் பலத்த பாதுகாப்பு

[கொழும்பு]

பாராளுமன்றத்தில் பாதுகாப்புகள் பலப்படுத்தப்பட்டுள்ளன.

பாராளுமன்ற வளவுக்குள் முன்னர் அனுமதிக்கப்பட்ட விருந்தினர்கள், பத்திரிகையாளர்கள் ஆகியோரின் கார்கள் இப்போது பாராளுமன்றத்துக்கு வெளியேயுள்ள வீதிகளில் நிறுத்தப்படுகின்றன.

பாராளுமன்ற வளவுக்குள் செல்வோரும் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். [சூ]

## அகதிகள் காணிகளை ஆணையாளர் பார்வையிட்டார்

(மன்னார்)

கடந்தவருடம் ஜூலை மாதம் இடம் பெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டு தற்போது மன்னார் மாவட்டத்தில் தங்கியிருக்கும் அகதிகள் குடும்பங்களை அகதிகள் புனர்வாழ்வுத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப் படவுள்ள காணிகளை அத்தியாவசிய சேவை ஆணையாளர் பார்வையிட்டார்.

மன்னாருக்கு வந்திருந்த அத்தியாவசிய சேவை ஆணையாளர் ரியர் அட்மிரல் பெரேரா அகதிகள் குடியமர்த்தப்படவுள்ள கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முழங்காவில், வன்னேரிக்குளம் ஆகிய பகுதிகளிலுள்ள காணிகளைப் பார்வையிட்டார்.

இக் காணிகளைப் பார்வையிடச் சென்ற அத்தியாவசிய சேவை ஆணையாளருக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது.

## அகில இலங்கை ரீதியில் முன்னணி

[யாழ்ப்பாணம்]

கல்வித் திணைக்களத்தினால் அண்மையில் நடாத்தப்பட்ட ஐந்தாம் வகுப்புக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலை மாணவிகள் பாலசுப்பிரமணியம் பாலகியும், தனபாலசிங்கம் ஜெகதீஸ்வரியும் அகில இலங்கை ரீதியில் முறையே நாலாவதும் ஐந்தாவதும் இடங்களைப் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையில் இருந்து மொத்தம் ஏழுபேர் சித்தியடைந்தமையையிட்டு உயர் அதிகாரிகள் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

## சேவைக்கால பயிற்சி

(பண்டத்தரிப்பு)

அடுத்த ஆண்டில் வருடம் ஒன்றில்கற்பிக்கும் வட்டுக்கோட்டைத்தொகுதியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கான சேவைக்காலப்பயிற்கி வகுப்பு பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில் கடந்தமூன்று தினங்களாக நடைபெற்றது.

வட்டுக்கோட்டை வட்டாரக்கல்வி அதிகாரி திரு. ப. சண்முகராசா தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்பில் யாழ் கல்வித்திணைக்களகல்வி அதிகாரி திரு எஸ். சுந்தரலிங்கம் உட்பட பலர் கலந்துகொண்டு உரையாற்றினார்கள். பயிற்சியில் பங்குபற்றிய ஆசிரியர்களுக்கு சான்றிதழ்களும் தினம் ஒன்றுக்கு 10 ரூபா 50 சதவீதம் படியும் வழங்கப்பட்டது.

## ரூபவாஹினி

மாலை

| | |
|---|---|
| 5-30 | ‘ரொய் லொக்ஸ்’ — சிறுவர் நிகழ்ச்சி (ஆங்கிலம்) |
| 6-00 | சிறுவர் நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-30 | “காத்திருப்பேன் உனக்காக” — தமிழ் திரைப்படம் - பாகம்-2 |
| 6-55 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | இசைநிசழ்ச்சி (சிங்களம்) |
| 7-45 | “கோட் ரெட்” (ஆங்கிலம்) |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | ‘கோட் ரெட்’ — தொடர்ச்சி |
| 9-00 | ‘டிபரன்ற் ஸ்டிரோக் — நகைச்சுவைச் சித்திரம் (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | திரைப்படம் (ஆங்கிலம்) |
| 10 30 | உலகச்செய்திகள் |
| 10-35 | திரைப்படத் தொடர்ச்சி |
| 11-35 | நிகழ்ச்சி முடிவு |

## தென்னை பயிர்ச்செய்கை: மானியம் வழங்கப்படும்

[வண்ணார்பண்ணை]

யாழ்ப்பாண மாவட்டத்தில் தென்னைப் பயிர்ச் செய்கைக்கென ஐந்துவிதமான மானியங்கள் வழங்கப் படவிருக்கின்றன.

தென்னை அபிவிருத்தி ஆராய்ச்சிப் பிரிவு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றது. தென்னை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்திலுள்ள இதன் துணை அலுவலகம் 6000 தென்னங் கன்றுகளைத் தென்னை உற்பத்தியாளர்களுக்கு விற்பனை செய்யவிருக்கிறது. 500 உயர் தரத் தென்னங் கன்றுகளையும் வழங்குவதற்கு இத்துணை அலுவலக உத்தியோகத்தர் ஏற்பாடுசெய்துள்ளார்.

யாழ்ப்பாணத்துக்கென இயங்கும் தென்னைஅபிவிருத்தி ஆராய்ச்சித் துணை அலுவலகம் நல்லூர் கமநலச் சேவை நிலையத்தில் இயங்கிவருகின்றது.

புதுநடுகை, கீழ் நடுகை, ஊடு பயிர்ச்செய்கை, வீட்டுத் தோட்டச் செய்கை, மறுசீரமைப்புச் செய்கை ஆகிய ஐந்துவித தென்னை உற்பத்திக்கும் மானியம் வழங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இவ்வலுவலக தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. க. சுரேந்திரராசா தெரிவித்தார்.

### யாழ் நவீன மலசலகூடம்

## அமைச்சருக்கு மீண்டும் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பஸ்நிலையத்தில், நவீன மலசலகூடத்தைத் தொடர்ந்து கட்ட அனுமதி வழங்குமாறு, யாழ் மாநகர சபை ஆணையாளர் திரு. சீ. வீ. கே. சிவஞானம் போக்குவரத்து அமைச்சரை கோரியுள்ளார்.

அமைச்சர் மொகமட்டுக்கு நேற்றுமுன்தினம் அனுப்பப்பட்ட கடிதத்தில் மலசலகூடத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார்

யாழ். மாநகரசபை ஏற்கனவே பஸ்நிலையத்திலிருந்த பழைய மலகூடத்தை இடித்து, அதே இடத்தில் நவீன மலகூடம் அமைக்க முடிவுசெய்து கட்டட வேலையை ஆரம்பித்த சமயம், வேலையை நிறுத்துமாறு மேலிடத்தால் பணிக்கப்பட்டது. [க]

## எம். ஜி. ஆர். சுகமடைய திருப்பலிப் பூசை

(மன்னார்)

தமிழக முதல்வர் திரு. எம். ஜி. ஆர். பூரண சுகமடைய வேண்டி மன்னார் — கோவிற்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் விசேடதிருப்பலிப் பூசை ஒன்று இடம் பெற்றது.

## சிறுமியின் ‘ஜிப்சி’ களை அபகரித்த ‘ஆசாமி’கள்!

(மாவிட்டபுரம்)

பாலர் பாடசாலைச் சிறுமிகள் இருவரை “ஆமிவரும்” என்றுபயமுறுத்தி மறைவிடத்திற்கு அழைத்துச்சென்ற இரு பெண்மணிகள் அவர்களது காதிலிருந்த பெறுமதி வாய்ந்த “ஜிப்சி”களை அபகரித்துக் கொண்டு கம்பிநீட்டிவிட்டனராம்.

மாவிட்டபுரத்தில் உள்ள பாலர் பாடசாலையொன்றில் பயின்றுவிட்டு மாவிட்டபுரம் புகையிரத நிலையத்துக்கருகில் உள்ள தமதுவீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்த சிறுமிகள் இருவருக்கே இந்தக்கதி ஏற்பட்டது.

இவர்கள் வீடுதிரும்பும் வழியில் இரு பெண்கள் இவர்களை வழிமறித்து “இவ்வழியால் ஆமிவரும் “எங்களுடன் வாருங்கள்” என்றுகூறி மறைவிடமான பாதையால் அழைத்துச் சென்றார்களாம்.

பின்னர் “காதில் நகைகள் இருந்தால் ‘ஆமிக்காரர்’ பிடிப்பார்கள்” என்று கூறி சிறுமிகளைப்பயமுறுத்திய அப்பெண்கள் சிறுமிகளின் காதிலிருந்த “ஜிப்சிகளைக்கழற்றி கடதாசிஒன்றில் சுற்றி வீட்டில்கொண்டுபோய் கொடுக்குமாறு கூறினராம்.

ஆனால் வீடுபோய் கடதாசிச்சரையை விரித்தபோது அதனுள்சிறுகற்கள் மட்டுமே இருந்தனவாம்.

ஜிப்சி”களுடன் கம்பிநீட்டிய பெண்மணிகளை தேடிப் பிடிக்க முயன்றபோதும் அவர்கள் கண்ணில்படாது தப்பித்துச்சென்றுவிட்டனராம்.

## சிரமதானம்

(கரவெட்டி)

கரவெட்டி யார்க்கரு கிராம குடும்பநலத்திட்டத் தொண்டர்கள் அண்மையில் கிராம சிரமதானப்பணி ஒன்றினை மேற்கொண்டார்கள்.

யாழ். மாவட்ட குடும்ப நலத்திட்ட அலுவலர் திரு. எஸ். பூவேந்திரன் தலைமையில் நடைபெற்ற இச் சிரமதானத்தின்போது இப்பகுதி வாய்க்கால்கள், வீதிகள் என்பன திருத்தப்பட்டன. பலர் இதில் கலந்துகொண்டனர்.

# "பெண்மைக்குப் பெருமை தேடித்தந்த இந்திரா"

(மானிப்பாய்)

''உலகின் அமைதிக்காகவும் சமாதானத்துக்காகவும் அரும்பாடுபட்டு உழைத்தவர் திருமதி இந்திராகாந்தி இதன் மூலம் பெண்மைக்கே பெருமை தேடித்தந்தவர் அவர்''.

இவ்வாறு ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலை அதிபர் திருமதி பா. கந்தசாமி பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் அஞ்சலிக் கூட்டத்துக்குத் தலைமைவகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அதிபர் தொடர்ந்து பேசுகையில், திருமதி இந்திரா மக்கள்பால் கொண்டிருந்த அன்பே அவரை அன்னை இந்திராவாக்கியது என்றும் மக்களின் துயர்களைத் துடைக்க நல்ல திட்டங்களை இயற்றி செயல்பட்டதாலேயே மக்கள் மனதில் அவர் அழியாத இடத்தைப் பெற்றுவிட்டாரென்றும் கூறினார்.

ஆசிரியை திருமதி செ. விசுவலிங்கம் பேசுகையில், ''அணிசேரா நாடுகளின் தலைவியாகப் பதவியேற்ற காலத்திலிருந்து தமது பொறுப்பை மிக்க அவதானத்துடன் செயல்படுத்திவந்தார் என்றும் கூறினார்

ஆசிரியை திருமதி சு. பதுவைநாயகம் பேசுகையில் ''நாட்டுமக்களின் விடுதலையே தமது விடுதலையென எண்ணி மக்கள் நல்வாழ்வில் மிக்க அக்கறைகாட்டிவாழ்ந்ததாலேயே அவர் மக்களால் இந்த அளவுக்குப் போற்றப்படுகின்ருர் என்று கூறினார்.

திரு. ஜே. அன்ரனி ஜெயக்குமார் பேசுகையில், ''பாரத நாட்டின் சுதந்திரத்துக்காகத் தம்மையே அர்ப்பணித்தவர் திருமதி இந்திரா என்றும் அவர் இறுதிவரை துணிச்சல் மிக்கவராகவே விளங்கினார் என்றும் குறிப்பிட்டார்

ஆசிரியர் திரு. க. கணேசலிங்கம் பேசுகையில் ''இலங்கைத் தமிழரின் துயர்துடைப்பதில் திருமதி இந்திரா தம்மாலானவற்றையெல்லாம் செய்ய முன்வந்தார் என்று கூறினார்.

மாணவிகள் செல்விகள் றோ. பிறிஜிட்டா, சூ. மேரி கிறிஸ்ரின், மாணவன் செல்வன் கி. அன்ரன் றொறிங்டன் ஆகியோரும் திருமதி இந்திராவின் பெருமைபற்றிப் பேசினர். கூட்ட ஆரம்பத்தில் அன்னை இந்திரா பற்றிய பாடல் மாணவிகளால் பாடப்பெற்றது.

# "எதிர்த்தாக்குதல்களால் பொதுமக்களுக்கு ஆபத்து, கஷ்டம் ஏற்படுகிறது!"

## வவனியாவில் லலித் உரை

(வவனியா)

பயங்கரவாதிகள் ஆயுதப்படையினர் மீது தாக்குதல் நடத்தும்போது ஆயுதப்படையினர் எதிர் தாக்குதல்களை நடத்தவேண்டியுள்ளது எதிர் தாக்குதலின்போது அப்பாவி பொதுமக்களும் ஆபத்தினையும், கஷ்டங்களையும் எதிர்நோக்கவேண்டியுள்ளது. ஆகவேவன்செயலுக்கு இறங்குவதற்கு தனிப்பட்டவர்களோ அல்லது குழுக்களோ முயற்சிகளை மேற்கொண்டால் அதுபற்றி அரசாங்கத்துக்கு அல்லது ஆயுதப்படையினருக்கு தெரிவிப்பது பொதுமக்களின் கடமையாகும்'' என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி வவனியாவில் தெரிவித்தார்.

வவனியா—தச்சன் குளத்தில் புதிதாக கட்டப்பட்ட ஆயுதப்படை தலைமை அலுவலகத்தை வைபவ ரீதியாக கடந்த 10ம் திகதி திறந்து வைத்து அங்குபேசுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் எழுந்துள்ள பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கு அமைதி அத்தியாவசியமாகும்

இத்தகைய பிரச்னைகளுக்கு பேச்சுவார்த்தை மூலமே தீர்வு காணமுடியும். ஆயுதம் மூலம் தீர்வுகாணமுடியாது.

பயங்கரவாதத்தினை ஒழித்துக்கட்டுவதற்கு ஆயுதப்படையினர் ஆயுதங்களை பயன்படுத்த வேண்டியுள்ளபோதும் நாடு எதிர்நோக்கும் நெருக்கடிநிலையில் அரசியல்தீர்வு காண்பதற்கு அரசு தொடர்ந்தும் முயற்சிக்கும்.

அகிம்சையினை விரும்பும் மக்கள் தமது அன்றாட வழமையான வேலைகளை செய்வதற்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள் பயங்கரவாதிகளே பாதுகாப்பு படையினர் அல்ல என்றும் அமைச்சர் கூறினார்.

பயங்கரவாதிகள் வெற்றியீட்டுவதை தாம் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை என்று கூறிய அமைச்சர் நாட்டின் அமைதியினை நிலைநாட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படும் என்றார்.

[கி]

# 1985 ம் ஆண்டுக்கான பாடசாலை தவணைகள்!

[உடுவில்]

1985ம் ஆண்டுக்குரிய பாடசாலைத் தவணைத் தினங்கள் கல்வி அமைச்சின் செயலாளரால் சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. 1985ம் ஆண்டுக்குரிய பாடசாலைத் தவணை விபரம் வருமாறு:

சிங்கள, தமிழ் பாடசாலைகள்: 1ம் தவணை 1985 ஜனவரி 7ம் திகதி முதல் 1985 ஏப்ரல் 3ம் திகதி வரை.

2ம் தவணை 1985 ஏப்ரல் 29ம் திகதி முதல் 1985 ஆகஸ்ட் 2ம் திகதி வரை

3ம் தவணை 1985 செப்ரெம்பர் 2ம் திகதி முதல் 1985 டிசம்பர் 6ம் திகதிவரை (இரு தினங்களும் உட்பட).

முஸ்லிம் பாடசாலைத் தவணைகள்: 1ம் தவணை 1985 ஜனவரி 7ம் திகதி முதல் 1985 மே 17ம் திகதி வரை.

2ம் தவணை 1985 ஜூலை 2ம் திகதி முதல் 1985 ஆகஸ்ட் 2ம் திகதி வரை.

3ம் தவணை 1985 செப்டம்பர் 2ம் திகதி முதல் 1985 டிசம்பர் 6ம் திகதிவரை (இரு தினங்களும் உட்பட).

# புதுவருட நிர்வாகிகள்

(சாவகச்சேரி)

கைதடி வடக்கு செல்வா சனசமூகநிலைய வருடாந்த பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் சி தங்கத்துரை, உப தலைவர் கு நடராஜா, செயலாளர் இ. கந்தசாமி உப செயலாளர் ச முருகதாஸ், பொருளாளர் நா. வாமதேவன் மற்றும் 5பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

# குண்டு வெடித்த குழி இராணுவம் செப்பனிட்டது!

[ஊரெழு]

அண்மையில் யாழ்.—பலாலி வீதியில் உரும்பிராய்க்கும் ஊரெழுவுக்கும் இடையே நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தின் பின் புதைகுழியாகக் காணப்பட்ட இடம் இராணுவத்தினர் எடுத்துக்கொண்ட முயற்சியால் இப்பொழுது போக்குவரத்துச் செய்யக்கூடியதாக அமைக்கப்படடுவிட்டது.

மேற்படி குண்டு வெடிப்பினால் வீதியின் நடுவே பெரும் குழியாக இருந்ததன் காரணமாக அருகிலுள்ள தோட்டக் காணியின் ஊடாகவே சகல வாகனங்களும் சென்று வந்தன.

கடந்த வியாழக்கிழமை நண்பகல் பலாலியிலிருந்து யாழ்ப்பாணம் சென்றுகொண்டிருந்த இராணுவத்தினரின் கவசவாகனங்களில் ஒன்று அன்றுபெய்த பெருமழை காரணமாக மேற்படி தோட்டக் காணிக்குள் புதைந்துவிட்டது. இராணுவத்தினர் பெருமுயற்சி செய்தும் கவசவாகனத்தை மீட்க முடியாமற் போய் விட்டது.

அந்த வேளையில் தற்செயலாக அவ்விடத்திற்கு வந்த அரச திணைக்களமொன்றுக்குச் சொந்தமான சனரக வாகனம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த பாரந் தூக்கியின் உதவியுடன் கவசவாகனம் மீட்கப்பட்டது. இராணுவத்தினரும் தொடர்ந்து தமது பயணத்தை மேற்கொண்டனர்

அன்றையதினம் மாலை யாழ்ப்பாணத்திலிருந்து பலாலி நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த இராணுவத்தினரின் கவசவாகனங்களில் ஒன்று ஏற்கனவே புதையுண்ட அதே இடத்தில் மீண்டும் புதைந்துவிட்டது. அந்தநேரத்தில் அவ்விடத்திற்குச் சல்லிக் கல்லு ஏற்றிவந்த ட்ரக்டர் வண்டியொன்றை வழிமறித்த இராணுவத்தினர், அதில் ஏற்றிவரப்பட்ட சிறிய கற்களைக் குண்டு வெடிப்பினால் ஏற்பட்ட அந்தக் குழிக்குள் கொட்டும்படி உத்தரவிட்டார்களாம் பின்னர் அதே ட்ரக்டரைக் கொண்டு அங்கே புதையுண்ட கவச வாகனத்தையும் வெளியே எடுத்தனர்.

# கரவெட்டி இளைஞர் மீது சவுதியில் கோஷ்டி தாக்குதல்!

(கரவெட்டி)

சவுதி அரேபியாவில் வேலை வாய்ப்புப் பெற்றுச் சென்று அங்குள்ள டமாம் நகரில் பணிபுரியும் இரு இலங்கை இளைஞர்கள் (கரவெட்டியைச் சேர்ந்தவர்கள்) அண்மையில் அந்நகரின் வீதியில் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாத கோஷ்டி ஒன்றினால் (அரபுக்காரர்கள்) பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்டு வீடொன்றில் வைத்து பலமாகத் தாக்கப்பட்டனராம்.

இவர்கள் தாக்குதலுக்குள்ளான வேளையில் வீட்டுக்குள் இருந்து வந்த பெண்மணி (அரபு) ''இவர்கள் இல்லை'' என்று அடையாளம் காட்டியதையடுத்து இருவரும் விடுவிக்கப்பட்டனராம் தாக்கப்பட்டவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

வேறு யாரோ இளைஞர்கள் அந்தப் பெண்மணியுடன் சேஷ்டை செய்ததற்கு இந்த இருவரும் அடிவாங்க வேண்டியதாயிற்று என்று கூறப்பட்டது.

# ஒப்பந்த ஆசிரியர்களுக்கு

(உடுவில்)

60 வயதுக்குமேல் ஒப்பந்த அடிப்படையில் சேவைசெய்யும் ஆசிரியர்களுக்கு இலங்கை அரசாங்க தாபனக்கோவைக் கமைய 21 நாள் சமயோசித

(8ம் பக்கம் 1ம் கலம் பார்க்க)

## கொட்டடி

# கொள்ளை வழக்கு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

கொட்டடி கொள்ளை வழக்கு யாழ். பதில் நீதவான் எஸ் அமிர்தலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு இம்மாதம் 22ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது.

இவ்வழக்கில், 82 செப்டம்பர் 30ம் தேதி கொட்டடியில் சிவசாமி சுபந்திராவீட்டுக்குள் அத்துமீறிப் பிரவேசித்ததாகவும், சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும், 5000 ரூபா பெறுமதியான வீட்டுத்தளபாடங்களையும் துவிச்சக்கர வண்டியையும் சேதப்படுத்தியதாகவும், 9125 ரூபா பெறுமதியான நகைகள், கைக்கடிகாரங்களைக் கொள்ளையடித்ததாகவும், த. கனகலிங்கம், சுந்தரரேஸ்வரகுமார், க. நாகேந்திரா, ப. ஜெயக்குமார், சி. அசோக்குமார், செ. சின்னத்தம்பி, அருளானந்தம் ஆகியோர் மீது குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

1ம். 2ம், 3ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி பி. ஆர். ரி. தனராஜசிங்கமும், 4ம், 5ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி சி. ரி. லிங்கராசாவும் ஆஜரானார்கள், வழக்காளிதரப்பில் பொலிஸாரின் உதவியுடன் சட்டத்தரணி ஜிம்மி ராசரத்தினம் ஆஜரானார்.

(க)

# அரச திணைக்களங்களில் களவு போகும் பொருட்களுக்கு நஷ்டஈடு!

## அதிகாரிகள் கடும் ஆட்சேபம்

[கொழும்புத்துறை]

யாழ் மாவட்டத்திலுள்ள அரசாங்கத் திணைக்களங்களில் களவு போகும் பொருட்களுக்குரிய பெறுமதியை பொறுப்பானவர்களே செலுத்தவேண்டும் என்ற பணிப்புரைக்கு ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்திலுள்ள பல்வேறு திணைக்களங்கள், கூட்டுததாபனங்களின் அதிகாரிகள் யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் இது சம்பந்தமாக தமது ஆட்சேபத்தையும், கவலையையும் தெரிவித்துள்ளனர்.

இங்குள்ள அரச திணைக்களங்களில் கொள்ளையடிக்கப்படும் பொருட்களுக்கு அவர்களே பொறுப்பாளிகள் என்று தேசிய பந்தோபஸ்து அமைச்சினால் விடுக்கப்பட்டுள்ள சுற்றுநிருபம் ஒன்றில் பணிக்கப்பட்டுள்ளது இதனையடுத்துப் பிரஸ்தாப அதிகாரிகள் திணைக்களங்களில் களவு போகும் பொருட்களுக்கு அவற்றிற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்கள் பொறுப்பேற்க முடியாத சூழ்நிலை பற்றி அரசாங்க அதிபரிடம் விளக்கிக் கூறினர் [கி]

# மகாசிவம் நாடு திரும்பினார்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்கக் கருத்தரங்கு ஒன்றில் கலந்துகொள்வதற்காக ஜெர்மனி சென்றிருந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் திரு. த. மகாசிவம் நாடு திரும்பியுள்ளார்.

இரு வார காலம் ஜெர்மனியில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் இலங்கையைச் சேர்ந்த மேலும் ஆறு தொழிற்சங்கங்களின் பேராளர்களும் கலந்துகொண்டனர். இக்கருத்தரங்கு முடிவடைந்ததைத் தொடர்ந்து பெல்ஜியம், இங்கிலாந்து; நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கும் பயணம் மேற்கொண்ட திரு. மகாசிவம் நாடு திரும்பியுள்ளார்.

# பாதிக்கப்பட்டோருக்கு

## சுப்பிரமுனிய ஆச்சிரமம் உதவி

[யாழ்ப்பாணம்]

வல்வெட்டித்துறையில்நடைபெற்ற தீ விபத்தில் வல்வை மகளிர் வித்தியாலய மாணவிகள் பலர் தங்கள் சீருடைகள், அப்பியாசக் கொப்பிகள் பலவற்றை இழந்தனர். இவற்றை ஈடுசெயயும்முகமாக அளவெட்டி சுப்பிரமுனிய ஆச்சிரமத்தினர் அவ்வித்தியாலத்துக்குச் சென்று பத்தாயிரம் ரூபாய் பெறுமதியான சீருடைத்துணிகளையும் அப்பியாசக்கொப்பிகளையும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வழங்கினார்கள். இவ் வைபவத்தின்போது ஆச்சிரமத்தின் பண்ணிசை ஆசிரியர் ஓதுவார்மூர்த்தி வி. ரி வி. சுப்பிரமணியம் அவர்கள் பல இனிய திருமுறைகளை ஓதி மாணுக்கரை மகிழ்வித்தார்

சென்ற ஜூலைக் கலவரத்தின்போது பாதிக்கப்பட்ட அகதிகள் பலர் இன்றும் கிளிநொச்சி முகாம்களில் இருந்து கஷ்டப்படுகிறார்கள் என்பதை அறிந்து ஆச்சிரம நிர்வாகிகள் கிளிநொச்சி குருகுலத்திலுள்ள அகதிகளுக்கென பதினையாயிரம் ரூபாயும், காந்தி சேவா சங்கத்தால் பராமரிக்கப்படும் அகதிகளுக்கெனப் பதினையாயிரம் ரூபாயும் அந்தந்த ஸ்தாபனங்களின் நிர்வாகஸ்தரிடம் கையளித்தனர் இவற்றை விடக் குடும்பத் தலைவனை வன்செயல் காரணமாக இழந்து கஷ்டப்படும்குடும்பங்களுக்கும் ஆச்சிரமத்தால் நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

# இலவசம்

[யாழ்ப்பாணம்]

கிருஷ்ணன் கோயில்களில் நட்டு உண்டாக்குவதற்கு புன்னைமரக்கன்றுகளை பெற விரும்புவோர் விண்ணப்பங்கள் செய்து நேரில் இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் என யாழ். மில்க் வைற் தாபனத்தார் அறிவித்துள்ளனர்.

# யாழ் மாவட்டத்தில் அடுத்தமாதம் முதல் அரசு ஊழியர்களின் சம்பளம் காசோலை மட்டுமே

## வங்கிக்கணக்கை ஆரம்பிக்குமாறு அரச அதிபர் யோசனை

(கொழும்புத்துறை)

அடுத்த மாதத்திலிருந்து யாழ். மாவட்டத்தில் சகல அரசாங்கத் திணைக்கள உத்தியோகத்தர்களின் சம்பளப் பணம் காசோலையாகவும், வங்கிக் கணக்குகள் ஊடாகவும் வழங்கப்பட இருக்கிறது.

அரசாங்கத்திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகளில்உத்தியோகத்தர்களுக்கான சம்பளப்பணக் கொடு பனவுகளில்ஏற்பட்டுவரும் பாதுகாப்புப் பிரச்னைகள், சம்பளப் பணக் கொள்ளைகள் போன்றவற்றிற்குப் பரிகாரம் காணும் முகமாகவே இப்புதிய திட்டத்தைஅறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் இதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாகமேற்கொண்டு வருகின்றார். இதனையடுத்து யாழ், மாவட்டத்திலுள்ள சகல அரசாங்க திணைக்கள, கூட்டுத்தாபன, சபைகளின் உத்தியோகத்தர்களும். சிற்றூழியர்களும் கூடிய விரைவில் ஏதாவது ஒரு அரசாங்க வங்கியில் தத்தமது பெயரில் சேமிப்புக் கணக்கு அல்லது நடைமுறைக்கணக்குகளை ஆரம்பிக்குமாறு பணிக்கப்பட்டுள்ளனர்

யாழ். அரசாங்க அதிபர் இது சம்பந்தமான உத்தரவொன்றைச் சுற்றுநிருபம் மூலம் விடுத்துள்ளார்.

அரசாங்க உத்தியோகத்தர்கள் தங்களது வதிவிடங்களுக்கருகிலுள்ள அரசாங்க வங்கியொன்றில் இக்கணக்குகளை ஆரம்பிக்குமாறும், உத்தியோகத்தர்கள் விரும்பினால் தங்களுக்கு வசதியான பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிராமிய வங்கிகளிலும் சேமிப்புக் கணக்கைத் திறக்கலாம் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்

சம்பளப்பணத்தைக் காசோலைகளாகப் பெற விரும்புபவர்களுக்குத் தனித்தனி காசோலைகளாகவும், மற்றவர்களின் சம்பளப் பணம் அவரவர்களின் வங்கிக் கணக்குகளுக்கும் அனுப்பி வைக்கப்படும் இதன் மூலம் சம்பளப்பணக் கொடுப்பனவுகளில் இதுவரைகாலமும் ஏற்பட்டுவந்த சிக்கல் இலகுவாக்கப்படும் என்றுஎதிர்பார்க்கப்படுகின்றது.

ஏற்கனவே அரசாங்க வங்கிகளில் சேமிப்பு, நடைமுறைக் கணக்குகளை வைத்திருப்பவர்களின் விபரம், காசோலைகள் மூலம் தமதுசம்பளப்பணத்தை பெற விரும்புபவர்கள்பற்றிய விபரங்களை இம்மாதம் 26-ம் திகதிக்கு முன்னர் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு சகல திணைக்களத் தலைவர்களையும் யாழ் அரசாங்க அதிபர் பணித்துள்ளார்.

இம்மாதம் முதல் யாழ் மாவட்டத்தில் ஆசிரியர்களின் சம்பளப் பணம் தனித்தனியாகக் காசோலைகள் மூலம் வழங்கப் படுவது குறிப்பிடத்தக்கது.

## தேசிய சாரணர் வாரம்: வட்டக்கச்சி முதலிடம்

[கொழும்புத்துறை]

அகில இலங்கை ரீதியிலான தேசிய சாரணர் வாரத்தில் வட்டக்கச்சி மகாவித்தியாலய சாரணர்குழு முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது.

இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து ஏழாம் திகதிவரை இத்தேசிய சாரணர் வாரம் நடத்தப்பட்டது. கடந்த வருடம் நடைபெற்ற தேசிய சாரணர் வாரப் போட்டியிலும் வட்டக்கச்சி மகாவித்தியாலயச் சாரணர் குழு இரண்டாமிடத்தைப் பெற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது,

1983ம் ஆண்டு அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட பல்வேறு சாரணர் போட்டிகளிலும் இம்மகா வித்தியாலயச் சாரணர் குழுவினர் மூன்று சதனைகளை நிலைநாட்டிப் பாராட்டுப்பெற்றுள்ளனர்.

## சைவஅநாதை இல்லத்துக்கு உணவு வழங்கினர்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி சைவ அனாதைவிடுதி சிறுவர்களுக்கு பின்வருவோர் மதியபோசனம் வழங்கிஉதவியுள்ளனர்.

ந. அருள்சாகரன் கோண்டாவில் தமது மாமனார் செ. தனபாலசிங்கத்தின் நினைவாக மதியபோசனம் வழங்கினார்.

வி. பொன்னுச்சாமி இந்துக் கல்லூரிலேன் யாழ்ப்பாணம். எ. சிவராசா, கல்வியன்காடு கே சண்முகநாதன், கோண்டாவில், கிழக்குகோண்டாவில் திரு பி தில்லைவாசன், 48 ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். சத்தியசாயிபாபா நிலையம் மத்தியசமிர்த்தி, யாழ்ப்பாணம், பொன்னையா, தேவதாசன் 31 நாள் நினைவை ஒட்டி பாமா காட்கேஸ் உரிமையாளர், ஆர். சபாரத்தினம், பால்ச் சோறு வழங்கியோர்:- பெரும்பாக உத்தியோகத்தர் கமநலசேவை நிலையம். சிற்றுண்டி வழங்கியோர்:- அவுஸ்திரேலியாவில் விடுமுறையைக்கழித்து வரும் நீதிஅரசரின் சகோதரி அம்பிகை தியாகராஜவின் 31 நாள் நினைவாக 5ம் திகதி வழங்கினார்.

## 1985 பொது விடுமுறைகள்

(உடுவில்)

1985-ம் ஆண்டுக்கான பொது விடுமுறை நாட்கள் அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

ஜனவரி 06 (ஞாயிறு) துருது பூரணை போயாதினம். 14 (திங்கள்) தைப்பொங்கல் தினம்.

பெப்ரவரி 04 (திங்கள்) சுதந்திர ஞாபகார்த்த தினம் 05 (செவ்வாய்) நவம் பூரணை போயா தினம். 17 (ஞாயிறு) மகாசிவராத்திரி தினம்.

மார்ச் 06 (புதன்) மெதின் பூரணை போயா தினம்.

ஏப்ரல் 04 (வியாழன்) பக் பூரணை போயாதினம். 05 [வெள்ளி] பெரியவெள்ளி. 13 [சனி] சிங்கள/தமிழ் புதுவருட நாளுக்கு முந்தியதினம், 14 [ஞாயிறு] சிங்கள/தமிழ் புதுவருடதினம்.

மே 01 (புதன்) மே தினம், 04 [சனி) வெசாக் பூரணை போயா தினம் 05 [ஞாயிறு] வெசாக் பூரணை போயா நாளுக்கு மறுதினம். 22 புதன் தேசிய வீரர் தினம்,

ஜூன் 02 (ஞாயிறு) பொசன் பூரணை போயாதினம் 20 (வியாளன்) ஈதுர்பிதர் நோன்புப் பெருநாள்

ஜூலை 01 (திங்கள்) எசல பூரணை போயா தினம் 31 (புதன்) அதிநிக்கினி பூரணை போயா தினம்.

ஆகஸ்ட் 27 (செவ்வாய்) ஈதுல் அல்வரா ஹஜ்ஜுபெருநாள் 29 (வியாழன்) சுத்த நிக்கினிபூரணை போயாதினம்.

செப்ரெம்பர் 28 (சனி) பின்றபூரணை போயாதினம்.

ஒக்டோபர் 28 (திங்கள்) வப்பூரணை போயாதினம்

நவம்பர் 11 (திங்கள்) தீபாவளிப்பெருநாள் 25 (திங்கள்) மீலாதுனநபி பிறந்ததினம் 27 புதன்) இல் பூரணை போயா தினம்.

திசம்பர் 25 (புதன்) நத்தார் தினம் 26 (வியாழன்) உந்துவப்பூரணை போயாதினம்.

## "மல்லாகம் கிராமத்தில் 5 ஆண்டுகளில் நல்லின கால்நடைகள் கிடைக்கும்"

### பால் உற்பத்தியாளர் கூட்டத்தில் உரை!

(யாழ்ப்பாணம்

"ஐந்தாண்டு காலத்தில் மல்லாகம் கிராமஅபிவிருத்திச் சங்க எல்லைக்குள் உள்ள ஒவ்வொரு வீட்டிலும் நல்ல இன பால்மாடுகளையோ அல்லது ஆடுகளையோ காணக்கூடியதாக இருக்கும். அதற்காக வெளிநாடுகளிலிருந்து நல்லின மாடு, ஆடுகளை தருவிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது"

மல்லாகம் பால் உற்பத்தியாளர் சங்க அங்குரார்ப்பண கூட்டத்துக்கு மல்லாகம் கிராமஅபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு. சு. ஸ்ரீபாஸ்கரன் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு உறுதியளித்தார்.

இப்பகுதியில் பால் உற்பத்தி பெருகும்போது பால் பதனிடல்,வெண்ணெய்க்கட்டி தயாரித்தல்போன்றவற்றுக்கான தொழிற்சாலையை உருவாக்க தாம் உத்தேசித்துள்ளதாகவும் திரு. ஸ்ரீ பாஸ்கரன் தெரிவித்தார்

இந்துசாதன ஆசிரியர் சட்டத்தரணி திரு நம சிவப்பிரகாசம் இச் சங்கத்தை அங்குரார்ப்பணம்செய்துவைத்தார்

மல்லாகம் கி மு. சங்கத்தின் ஒரு கிளையாக பால் உற்பத்தியாளர் சங்கம் இயங்கவுள்ளது (மா)

## ஒப்பந்த

(7ம்பக்கம்5ம்கலத் தொடர்ச்சி)

லீவும், 20 நாட்கள் சுகவீன லீவும் வழங்கப்படவுள்ளது

இவர்களுக்கும் இவர்களுடையவாழ்க்கைத் துணைவர்களுக்கும் அரசாங்கநிர்வாகச்சுற்றறிகைப் பிரகாரம் ஒரு சோடி விடுமுறை புகைவண்டி ஆணைச்சீட்டும் வழங்கப்படலாம். (கி)

## இலவச குழாய்க்கிணறு

(சாவகச்சேரி)

"கைதடியில் நிர்மாணிக்கப்படவுள்ள யாழ். விழிப்புலனற்றோர் சங்கக் கட்டிடம் அமையவுள்ள காணியில் ரூபா 10,000 செலவிலான குழாய்க் கிணறு ஒன்றை "குளோபல் என்ஜினியரிங் ஸ்தாபனம்" இலவசமாக அமைத்துக் கொடுக்கவுள்ளது என்று யாழ் விழிப்புலனற்றோர் சங்கத்தின் தலைவர் திரு. கா. விஜயராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

## உள்ளூராட்சி திணைக்கள சாதனங்கள் இராணுவத்திடம் ஒப்படைப்பு!

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் பொறுப்பிலிருந்த தட்டச்சு இயந்திரங்களும், ரோனியோ இயந்திரங்களும் நேற்றுக்காலை இராணுவத்தினரிடம் யாழ் மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளரினால் பாரம் கொடுக்கப்பட்டன.

தேசியவீடமைப்புச் செயலக கட்டிடத் தொகுப்பில் இவ் வலுவலகம் அமைந்துள்ளது. பாதுகாப்புக் காரணங்கள் கருதியே இவ் உபகரணங்கள் பாதுகாப்புப்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன என்று தெரியவருகிறது.

## "சொல்லிலும் செயலிலும் தூய்மை மிளிரவேண்டும்"

### ஆண்டகை அறிவுரை

[புலோலி]

"கத்தோலிக்க ஆசிரியர்கள் சொல்லிலும், செயலிலும் தூயவர்களாக மிளிர்ந்து உண்மையை, நீதியை எடுத்துரைப்பதோடு பிழையைப் பிழை என்று ஆணித்தரமாகக் கூறும் உளப்பாங்கு உடையவர்களாக விளங்கவேண்டும்.

இவ்வாறு யாழ். மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்க ஐந்தாவது ஆண்டு நிறைவு தினவிழாவிலே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ் மாவட்ட ஆயர் பேரருட் திரு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை குறிப்பிட்டார்.

யாழ். மறை கல்வி நிலையத்தில் சங்கத்தலைவர் திரு. ஆர். யோசப் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தொடர்ந்து ரையாற்றிய யாழ். ஆயர் குறிப்பிட்டதாவது:

கொலை செய்யாதே, களவெடுக்காதே என்னும் கட்டளைகளுக்கு எதிரகப் புரியப்படும் குற்றங்களைப் பிழையானவை என்று எடுத்துரைக்கத் தயங்கக்கூடாது

இன்று இங்கு திரண்டிருக்கும் உங்களைக் காணும் பாது உண்மையிலே நீங்கள் உங்கள் சங்கத்தில் பற்றுடையவர்களாகவும் பொறுப்பை உணர்ந்து நடக்கும் பக்குவம் வாய்ந்தவர்களாகவும் விளங்குகிறீர்கள் என்பதைக் கண்டு பெருமிபடைகின்றேன். உங்கள் பணி சிறப்படைந்து ஆர்வமுள்ள அப்போஸ்தலித்த பணியாக மிளிர ஆசிக்கின்றேன்

சிறப்பு விருந்தினரான யாழ். கல்வி அதிகாரி செல்வி எல். ஆர். நவரத்தினசிங்கம் உரையாற்றுகையில், கிறிஸ்தவ ஆசிரியரின் கிறிஸ்துவைப் பிரதிபலிப்பவன். எனவே அவன் கிறிஸ்துவின் முன் மாதிரியில் நடந்து தனது பணியின் பொறுப்பை உணர்ந்து தன்னிடம் ஒப்படைக்கப்படும் மாணவச் செல்வங்களை அறிவிலும் ஆன்மீக மேம்பாட்டிலும் பயிற்றுவிக்கக் கடமைப்பட்டுள்ளான். இம்மறை மாவட்ட கத்தோலிக்க ஆசிரியர் சங்கம் சிறப்பாக இயங்குவது போற்றப்படவேண்டியதாகும் என்றார்.

சங்கப் பரிபாலகர் அருட்திரு ஜே நீக்கிலஸ் அடிகளார் உரையாற்றுகையில், துறவிகளின் தியாக சேவைகளைக் காட்டிலும் பொது நிலையினருடைய தியாகசேவை மேலானது. உங்கள் பலரின் தியாக சேவையின் கூட்டு மொத்த உழைப்பின் பயனே கத்தோலிக்க ஆசிரியர் சங்கச் செயற்பாடாகும் என்றார்.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. சி வின்சென்ற் தமது உரையில், கடந்த காலங்களைக் காட்டிலும் கூடுதலான மாணவர்கள் கத்தோலிக்க மறையைக் கரிசனையுடன் கற்று வருகின்றனர் என்பதை இவ்வாண்டு நடைபெற்ற வேதாகம மறைக் கல்விப் போட்டித் தேர்வு எடுத்துக் காட்டுகின்றது. முன்னொரு முறையும் நடவாத புதுமையாக இம்முறைத் தேர்வுக்குத் தோற்றிய பத்தாயிரம் மாணவர்களில் முந்நூற்றுக்குமதிகமானோர் நூறு புள்ளிகளைப்பெற்று விசேட பரிசில்களைப் பெறுகின்றனர் என்றால் ஆசிரியர்கள் எவ்வளவு பொறுப்புணர்ச்சியுடன் நடந்துகொள்ளவேண்டுமென்பதை உணரக்கூடியதாகவுள்ளது என்றார்.

மன்னார் மறை மாவட்ட மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அ. பிலிப் அடிகளும் உரையாற்றினார்.

## நிதி உதவி

[சாவகச்சேரி]

கைதடியில் அமைக்கப்படவுள்ள யாழ் விழிப்புலனற்றோர் சங்கக் கட்டிடத்திற்சென நல்லூரில் வசிக்கும் திரு ஏ. அப்பாத்துரை [வயது 82] என்பவர் இரு கண் பார்வையற்ற தமது மகளான செல்வி அப்பாத்துரை என்பவரின் ஞாபகமாக ஒரு தொகை நிதியை கைதடியில் நடைபெற்ற வைபவமொன்றில் அன்பளிப்புச் செய்தார்

செல்வி அப்பாத்துரை என்பவர் கண் பார்வையற்ற நிலையிலும், திருமநெல்வேலியிலுள்ள கிருஷிகப் பாடசாலையில் கமத்தொழில் விரிவாக்க உத்தியோத்தராகப் பணி புரிகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மீண்டும் தலைவர்

[புலோலி]

யாழ். மறை மாவட்டக் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத் தலைவராக மீண்டும் திரு. ஆர். யோசெவ்வே தெரிவு செய்யப்பட்டுள்ளார். பொதுச் செயலாளராக திரு. சி. வின்சென்றும், பொதுப் பொருளாளராக திரு எஸ். ஈ. பார்னண்டோவும் துணைத் தலைவர்களாக செல்வி எம். சின்னப்பு, திரு எம் ஜெயசீலன் ஆகியோரும், துணைப் பொதுச் செயலாளராக திரு அ பிலிப்பையாவும், பிரசாரச் செயலளராக திரு பி சூசைப்பிள்ளையும் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்பொதுக்கூட்டத்தில் யாழ் ஆயர் பேரருட் திரு. கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

### சிங்காரவேலு இறுதிக்கிரியை

## பெருந்தொகை மக்கள் கண்ணீர் அஞ்சலி

[வவனியா]

முல்லைத்தீவு மக்கள் மத்தியுல் மிகவும் செல்வாக்குப் பெற்று விளங்கியவரான முல்லைத்தீவு தலைமைக்காரியாலய உதவி அரசாங்க அதிபர் திரு வி. சிங்காரவேலுவின் சடலம் கடந்த 15-ம் திகதி இரவு முல்லைத்தீவு வந்தடைந்து இறுதிக்கிரியைகள் நடந்தன.

கடந்த 14-ம் திகதி உதவி அரச அதிபர் அனுராதபுரத்திற்கு அருகாமையில் வாகன விபத்தில் அகால மரணமானுர்.

கடந்த சனிக்கிழமை இவரது சடலம் முல்லைத்தீவில் தகனம் செய்யப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் பெருந்தொகையானவர்கள் கலந்து கொண்டனர். புதுக்குடியிருப்பு, முள்ளியவளை, செம்மலை பகுதியிலிருந்தும் பெருந்தொகையானவர்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொள்ள வந்திருந்தனர்.

## "தமிழ்மக்கள் இன்னல்கள் சர்வதேசரீதியில் அணுகப்படுகிறது"

(ஐ. சண்முகலிங்கம்)

"நமது தமிழ் மொழி பற்றிய ஆராய்சிகள் உலகளாவிய நிலையில் ஆராயப்படுகின்றன. செனகல், பிளிஸ்ஸியர், சுமேரியர் இப்படி பல மொழியினர் தம்மொழிகளுக்கும் தமிழ் மொழிக்குமுள்ள தொடர்புகளைக் கண்டறிய பெரிதும் ஆர்வம் கொண்டு தமிழ் அறிஞர்களை நாடுகின்றனர். நம் மக்கள் படும் இன்னல்களை சர்வதேச ரீதியில் கவனத்தை ஈர்த்து அணுகப்படுகின்றன எனவே தமிழ் மக்கள் பற்றி வெளிவரும் எந்த ஒரு நூலும் சமூகவியலைச் சார்ந்து நிற்பது தவிர்க்க முடியாதது. நம்மிடையே சமூகவியலாளர்கள் குறைவு. வெளிக்கலாச்சாரத் தாக்கத்தில் நம்மவர் நிறைய மூழ்கியுள்ளனர். இவைகளை அகற்ற நம்மவர்களின் சமூகவியல் பார்வை கொண்ட எழுத்துத் தொண்டு மிக அவசியமானது. நம்மக்கள் உணர வேண்டிய பல உண்மைகளை இன்று வெளியாகும் இந் நூல் கூறுகிறது"

இவ்வாறு பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருமதி. மனோன்மணி சண்முகதாஸ், வித்துவான் சொக்கலிங்கம், திரு வன்னியகுலம், திரு கேடானியல் ஆகிய ஐவரும்எழுதி வெளியிட்ட "தமிழர் திருமணம்நடைமுறைகள்" புத்தக வெளியீட்டு விழாவில் பேசிய கலாநிதி. சிற்றம்பலம் தெரிவித்தார்.

முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தினரால் வெளியிடப்பட்ட இந்நூல் இச்சங்க உபதலைவர் திரு பஞ்சாட்சரம் தலைமையில் நல்லை ஆதீன மண்டபத்தில் நடைபெற்றது.

கலாநிதி சிற்றம்பலம் தொடர்து பேசுகையில் கூறியதாவது:-

"இன்று தமிழர்களின் திருமணச் சடங்குகளின் நடைமுறைகளில் பல புதிய மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன.

இந்துக் கிரியைகள் தற்போது இந்திய வட-தென் பகுதிகளில் அனேகமாக கலந்து விட்ட நிலையை அடைந்து விட்டன. ஆண் பெண் ஒன்று சேர்க்கப்படும் 'திருமணம்' என்பது தனியே 'இன்பம்' அடைவதற்கான ஒன்று அல்ல. அது சமூகரீதியாக செயற்படுவதற்காக ஏற்படுத்தப்படும் ஒரு சடங்கே யாகும். இரண்ட மணி நேரம் நடக்கும் இத் 'திருமண' சடங்குகள் பல உண்மைத்தத்துவங்களைக் கொண்டவை. அக்கினி வளர்ப்பது தேவதூதனை வரவழைத்து நற்பேறு கொள்வதாகவும், 'கும்பம்' வைப்பது சிவன்-பார்வதியைநினைவு கூர்வதாகவும் உள்ளவை 'புத்திரபாக்கியம்' என்பது கூட திருமணமானவர்களின் சமூக ரீதியான செயற்பாட்டின் தொடர்ச்சியை நிறைவேற்றுவதற்காக ஏற்படுத்தப் படுவதேயாகும்.

"சங்ககாலத்திலேயே 'மணம்' என்பதற்கான சில நடை முறைகள் வரையறுக்கப்பட்டிருந்தாலும் அன்று நிலவிய 'மாலைமாற்றும்' சடங்கு இன்று. தாலி கட்டுவதாக ஆகிவிட்டது, இப்படியான பல மாற்றங்கள் காலத்துக்கேற்ப நடைமுறையில் வந்து கொண்டிருக்கின்றன நம் திருமணங்களில் 'சீதனம்' ஒழிக்கபபட வேண்டும்" என்று கூறினுர்.

பேராசிரியர் அ சண்முகதாஸ் 'தமிழர் திருமண நடைமுறைகள்' நூன் பதிப்பாசிரியர் என்றவையில் தமது கருத்தினை பின்வருமாறு தெரிவித்தார்.

"தமிழர் பற்றிய ஆய்வுகளை பல உலகநாட்டு மொழியியலாளர்கள் செய்துவருகின்றனர். ஜப்பான் தேசத்து பேராசிரியர்கள் பலர் தமிழர் பற்றிய ஆய்வுகளைக் குறிப்பாக ஈழத் தமிழர் பற்றிய ஆய்வுகளைச் செய்வதில் அண்மைககாலமாக மிகுந்த அக்கறை கொண்டுள்ளனர்.

இதற்கு அவர்கள் கூறும்காரணம் என்னவெனின்..

பழமை மிக்க நாகரீக இந்திய உபகண்டத்தின் பண்படுகளுக்கு தொடர்புடையவர்களாக இருந்து கடல்கோளினுல் பழமைமிக்க லெமூரியா கண்டம் அழிந்துவிட, எஞ்சியவர்களாக இலங்கை நட்டிலே வாழும் தமிழர்களிடையே ஆராய்வதன மூலமே சரியான பண்பாடு நாகரீகத் தொடர்புகளைத் தெரிந்துகொள்ள முடியும் என்பதாகும்.

"ஆசியப் பண்பாடுகளை முற்ருகக் கொண்ட ஜப்பான் தனியான தீவுகளாக இருப்பதினுல் பழமையான பல பண்படுகள் நிலைத்து நின்றுவிட்டன" என்ருர்

திரு. செம்பியன் செல்வன், டாக்டர் சிவஞானசுந்தரம் (நந்தி), கவிஞர் வே ஐயாத்துரை, மயிலங்கூடலூர் நடராஜன், திரு சொக்கலிங்கம் (சொக்கன்) ஆகியோரும் உரையாற்றினர்

முதற்பிரதிகளை திரு. க. நாகேஸ்வரன், திரு.எஸ். திருச்செல்வம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

## சஜீவனுக்கு முதலிடம்

[வவனியா]

அகில இலங்கை ரீதியில் தமிழ் மாணவர்களுக்கிடையே நடந்த பேச்சு, கட்டுரை, வாசிப்பு போன்ற போட்டிகளில் முதலாம் பிரிவில் வாசிப்புப் போட்டியில், ஜுடினே சஜீவன் சிவகுரு முதலாவது பரிசைத் தட்டிக் கொண்டார். வவனியா மாவட்டம் இரண்டாவது இடத்தைப் பெறுவதற்கு இவர் உதவியமை குறிப்பிடத்தக்கது

## அன்பால் அனைவரையும் ஆட்கொண்ட அதிகாரி

செல்வி. எல் ஆர். நவரட்ணசிங்கம் அவர்கள் சிறந்த கல்வித்தகமைகளுடன் பலவழிகளில் கல்வித்துறையிலே பணிபுரிந்தவர். அவரது கல்வி தகமைகளை குன்றில் இட்ட விளக்காக பலரும் அறிய வேண்டு . அவர் கல்வித் துறையில் வேறுபட்ட காலங்களில் வேறுபட்ட துறைகளில் கடமையாற்றியுள்ளார். பல காலமாக உதவி ஆசிரியராக இருந்தார் பின்பு தொழில்வழிகாட்டிஆலோசகராகவும் கல்வி அதிகாரியாகவும் சேவையாற்றியிருந்தார்.

1969ம் ஆண்டு பங்குனி மாதம் வரை கொழும்பில் தொழில் வழிகாட்டி ஆலோசகராக இருந்தார். தொடர்ந்து 1971ம் ஆண்டு முதல் 1974ம் ஆண்டு வை.த மாதம் வரை மட்டக்களப்பில் தொழில் வழிகாட்டி ஆலோசகராகவும் ஆங்கில ஆசிரியராகவும் கடமையாற்றி அரசாங்கப் பரீட்சைத் திணைக்களத்திற்கு ஆலோசகராக அதனைத் தொடர்ந்து கல்வி மறுசீரமைப்பு சபையில் ஆலோசகராக தொழில் புரிந்தார்.

அதன் பின்னர் அவர் 1979ம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் பதவி உயர்வு பெற்று கல்வி அதிகாரியாக வந்தார். இந்தக் காலம் முதல் கல்வி தொடர்பான எல்லா நிகழ்ச்சிகளிலும் குறிப்பாக ஆங்கில நிகழ்ச்சிகளில் முழு அக்கறையுடன் ஈடுபட்டு அளப்பரும் சேவைகள் ஆற்றினுர்.

1980ம் ஆண்டில் இறுதியில் இருந்து ஆங்கிலம் கற்பித்தலுக்கு அதிகாரியாகவும் ஆசிரிய சேவைக்காலப் பயிற்சிக்கு அதிகாரியாகவும் பணியாற்றினுர். இவர் இக் காலத்தின் போது ஆசிரியர்களுக்காக நடாத்தப்பட்ட பல கருத்தரங்குகளில் தான் அதிகாரியாக இருந்தாலும் தானும் ஆசிரியர்களில் ஒருவராக இருந்து அரிய கருத்துக்களை அளித்து தன் அனுபவங்களைபகிர்ந்துகொண்டார்.

1982ம் ஆண்டில் ஆங்கில தமிழ் வட்டாரப் போட்டிகளைச் சிறப்பாக நடத்தி செல்வி நவரட்ண சிங்கம் ஆங்கிலம் கற்பித்தலில் புதிய பரிமாணத்தையே ஏற்படுத்தியிருந்தார். அத்துடன் இவ்வருடமும் தமிழருக்கு ஏற்பட்ட பலநெருக்கடிநிலைமைகட்கு இடையே போற்றக் கூடிய முறையில் இம்மாதம் 14ம்,15ம் திகதிகளில் இப்போட்டிகளை வெற்றிகரமாக நடத்திஉள்ளார் பாடசாலைகளை மூன்று தரங்களாக வகுத்து வசதிகள் குறைந்த கிராமப் பாடசாலைகளும் பங்கேற்கும் படி செய்தார். அத்தோடு போட்டி நிகழ்ச்சிகளையும் விரிவாக்கி பலதரப்பட்ட அம்சங்களையும் உள்ளடக்கி சகல மாணவர்களது திறமைகளையும் வெளிக் கொணரக் கூடியவகையில் ஆங்கிலத்தினப் போட்டி, தமிழ்த்தினப் போட்டி எனும் பலபேட்டிகளையும் பலபொருட் காட்சிகளையும் நடத்தியிருந்தார். தொடர்ந்து யாழ்ப்பாணப் பரீட்சை சபையில் உதவிதலைவராகவும் இருந்து பலபரீட்சை சபைகளை திறம்பட செயற்படுத்தினுர்.

இவ்வாருக பல சேவைகளாற்றிய அவரது பண்பு போற்றுதற்குரிய ஒன்று

11-ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

## வவனியாவில் சாதனை

(வவனியா)

இறப்பைக்குளம் மகளிர் வித்தியாசாலை வவனியா மாவட்டத்தில் ஒரு சாதனையினை நிலை நாட்டியுள்ளது

ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் இங்கு 19 மாணவர்கள் சித்திபெற்று புலமைப் பரிசில் பெற தகுதி பெற்றுள்ளனர். 6 பெண்களும் 13 ஆண்களும் இதில் அடங்குவார்கள்.

## மாணவனின் திறமை

(ஊரெழு)

சுன்னுகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவனுன செல்வன் முருகையா முகுந்தன் இவ்வருட ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுத் திறமையாகச் சித்தியடைந்துள்ளார்.

மொத்தமாக166புள்ளிகளைப் பெற்றுள்ள இந்த மாணவன் யாழ் மாவட்டத்தில் திறமையாகச் கிதிதியடைந்தவர்களில் ஒருவராகக் கணிக்கப்படுகிறுர்.

## யாருடையது?

அத்தனை தோட்டத்தைச் சேர்ந்த திரு. துரைசாமி செல்வரத்தினத்தின் அடையாள அட்டையை ஒரு அன்பரும், யாழ்.பிஸ்கால் லேனைச்சேர்ந்த திரு. ஐயாத்துரை அருளம்பலத்தின் மக்கள் வங்கி சேமிப்புப் புத்தகத்தினை திரு கே. சந்திரசேகரமும், இறைபணி நிற்றல் என்ற புத்தகத்தினையும், சிலதஸ்தாவேஜுகளையும் திரு. ஆர். குமாரசாமியும் கண்டு எடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள். உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளவும்.

## சிலை அமைக்கத் தடை

(யாழ்ப்பாணம்)

தமிழ் இனத்திற்கும் தமிழ் மொழிக்கும் பெரும் பணியாற்றிய அருட்திரு தனிநாயகம் அடிகளுக்கு நெடுந்தீவு மத்தியகிராமஅபிவிருத்திச் சங்கம்சிலைஅமைப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள சிலபொதுஸ்தாபனங்களும் தனிப்பட்ட சில நபர்களும் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து உதவி அரசாங்க அதிபர் இந்த தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளார்,

இது நெடுந்திவு பொது மக்களுக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளித்திருப்பதாக கிராமஅபிவிருத்திச்சங்கச்செயலாளர் திரு சு. கணேசலிங்கம் தெரிவித்துள்ளார்.

## நாயாறு

(3-ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

இருந்து வருகிறுர். எனவே இவர் சரீரப் பிணையில்செல்ல அனுமதிக்கப்படவேண்டும் என்று மன்றிற்கு விண்ணப்பத்தார். அரசதரப்பில் சட்டத்தரணி திரு த. ஸ்ரீஸ்கந்தராஜா ஆஜராகியிருந்தார்.

## ஒடுக்கப்பட்ட...

(4ம்பக்கம் 5 கலத் தொடர்ச்சி

யல் தீர்வை உண்டாக்குவதற்கு முழுமனதுடன் முயன்று வரும் வேளையில் காலன் அவர் உயிரைப்பறித்தது எமக்கு ஆற்றெணுத்துயரத்தை அளிக்கிறது. அவரின் ஆத்மா சாந்தியடைய இரு நிமிடம் மௌன அஞ்சலி செய்வோம்."

ஆசிரியர் சி. குமாரசாமி பேசுகையில்:- இந்திராவின் குடும்பப்பண்புகளையும், பிரபுத்துவக்குடும்பத்தில் பிறந்து ஏழைகளுக்கு அவர் சேவையாற்றிய பெரும் தன்மைகளையும் குறிப்பிட்டார். ஆசிரியர் திரு க. கதிர்காமநாதனும் உரையாற்றினுர்.


### வல்வெட்டித்துறை நகராட்சி மன்றம்

## ஏல விற்பனை அறிவித்தல் 1985

வல்வெட்டித்துறை மரக்கறிச்சந்தை, வல்வெட்டித்துறை மீன்சந்தை, தொண்டமானுறு மீன்சந்தை ஆகியவற்றை 1985-01-01 தொடக்கம் 1985-12-31-ந் திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவற்றை 1984- 2-03-ந் திகதி முற்பகல் 10-00 மணி தொடக்கம் பிற்பகல் 02-00 மணிவரை என்னுல் அல்லது அதிகாரம் வழங்கப்பட்ட உத்தியாகத்தரால் பகிரங்க ஏலத்தில் குத்தகைக்குக் கொடுக்கப்படும்.

### அட்டவணை

| | விபரம் | 1984-ம் ஆண்டிற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட குத்தகைத்தொகை | ஆரம்ப கேள்வித் தொகை | ஏலவிற்பனை இருப்பு வைப்பு |
|---|---|---|---|---|
| 1. | மரக்கறிச்சந்தை வல்வெட்டித்துறை | 52140/- | 57354/- | 1000/- |
| 2. | மீன் சந்தை வல்வெட்டித்துறை | 49500/- | 54450/- | 1000/- |
| 3. | மீன்சந்தை தொண்டமானுறு | 7500/- | 8250/- | 250/- |

எந்த வாரு கேள்வியையும் காரணம் காட்டாது கேள்விகள் அனைத்தையும் ஏற்கவோ நிராகரிக்கவோ நகராட்சி மன்ற செயலாளருக்கு அதிகாரமுண்டு.

கேள்வி கேட்க விரும்புவோர் அட்டவணையிற் குறிப்பிட்ட பிரகாரம் உள்ள தொகைகளை 1984-11-30.ந் திகதி பிற்பகல் 01-00 மணிக்குப் பிந்தாமல் ஏல விற்பனை இருப்புப் பணமாகச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ள வண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. சுப்பிரமணியம்
செயலாளர்
நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
வல்வெட்டித்துறை. 15-11-1984

804

# சலரோகத்தை கட்டுப்படுத்தும் உணவுப் பொருட்கள்

[புலோலி]

கடலை, பருப்பு, பயறு போன்ற உணவுப்பொருட்கள் ஊட்டம் நிறைந்த உணவுப் பொருட்களாக மட்டுமன்றி சலரோகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்த உணவுப்பொருட்களாகவும் இருப்பதாக அண்மையில் மருத்துவ ஆராய்ச்சிகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. குருவித்தலைப் பாகற்காய் சலரோகத்தைக் சட்டுப்படுத்தக்கூடிய சக்தியைக் கொண்டுள்ளது. எனவே சலரோகத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய உணவுப்பொருட்களை உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும்.''

மேற்கண்டவாறு பருத்தித்துறை லயன்ஸ் கழகத்தால் நடாத்தப்பட்ட 'சலரோகம்' பற்றிய கருத்தரங்கில் கருத்துரை வழங்கிய பொதுவைத்திய நிபுணர் டாக்டர் ஆர். எவ். ஜேம்ஸ் குறிப்பிட்டார்.

பருத்தித்துறை வட - இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் எம். கே. முருகானந்தன் தலைமை தாங்கினர். கருத்தரங்கின் ஆரம்பத்தில் மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் அகால மறைவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. டாகடர் ஜேம்ஸ் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:- ''சலரோகம் இன்று பலரைப் பீடித்துள்ளது. இதனல் அவர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர். அதிகளவு சிறுநீர் வெளியேற்றப்படுதல், அதிகளவு தண்ணீர்விடாய், போஷாக்கு மிகு உணவுகளை உண்டும் உடல் மெலிதல், களைப்பு, சொறிவு போன்றன சலரோகத்தின் குணங்களாகும். சிறுநீரில் மாத்திரம் சீனிச்சத்திருந்தால் சலரோகம் எனக்கொள்ள முடியாது. இரத்தத்திலும் சீனிச்சத்துக் கூடும்போதுதான் ஒருவர் சலரோகத்தால் பீடிக்கப்பட்டுள்ளார் என்பதை தீர்மானிக்க முடியும்.

சலரோகத்திஞல் பீடிக்கப்பட்டவர்கள் சுத்திகரிக்கப்பட்ட காபோவைதரேற்றுக்களான குளுக்கோஸ், சீனி என்பனவற்றை உண்ணக்கூடாது. சுத்திகரிக்கப்படாத காபோவைதரேற்றுக்களான சோறு, அரிசிமா போன்றவற்றை வைத்திய ஆலோசனையுடன் உண்ணவேண்டும். சலரோகத்திஞல் பீடிக்கப்பட்டவர்கள் மருந்துகளைப் பாவிக்கும்போது இரத்தத்தில் உள்ள சீனிச்சத்து குறைவடையும். இதனல் நோயாளிச்குவியர்வை, களைப்பு போன்றன ஏற்படும்போது மாத்திரம் இந்நோயாளி சுத்திகரிக்கப்பட்ட காபோவைதரேற்றுக்களை உண்ணவேண்டும். இவ்வேளையில் வேண்டிய சக்தி கிடைக்காவிட்டால் மூளையும் பாதிக்கப்படும்.

''சலரோகத்திஞல் பீடிக்கப்பட்டவர்களுக்கு 'இன்சுலீன்' ஊசிமூலம் ஏற்றப்படுகின்றது. இவ்வாறு இன்சுலீன் ஊசிமூலம் ஏற்றப்படும்போது கைகளில் மாத்திரமன்றி வயிற்றில் கொப்பிளைச்சுற்றியும், கால் தொடைகளிலும் போடவேண்டும். ஒரே இடத்தில் போடக்கூடாது.

சத்திரசிகிச்சை வைத்திய நிபுணர் டாக்டர் வி. ஜெயப்பிரகாசம் கருத்துவழங்குகையில்; ''சலரோகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய வழிமுறைகளை ஒவ்வொருவரும் கையாளவேண்டும் சலரோகத்தைக் கட்டுப்படுத்தாதவிடத்து ஏற்படும் புண்கள், அழுகல் நோய்களிஞல் சத்திரசிகிச்சைமூலம்சிலஉறுப்புக்களை அகற்றவேண்டியேற்படும்'' என்று கூறிஞர்.

லயன் டாக்டர் எஸ். பாலகிருஷ்ணன் கருத்துரை வழங்குகையில்; ''சில பெண்கள் சலரோகத்திஞல் பீடிக்கப்பட்டிருப்பது அவர்கள் கர்ப்பிணிளாக ஆகும்போதே முதன் முதன்முதலாகக் கண்டுபிடிக்கப்படுகின்றது. இதுபெருங் குறைபாடாகும். கர்ப்பிணிகள் சலரோகத்திஞல் பீடிக்கப்பட்டிருப்பின் பிறக்கும்பிள்ளை நிறைகூடியதாக இருக்கும். சலரோகத்திஞல் பீடிக்கப்பட்டுள்ள சில பெண்களுக்குக் கற்பம் தங்காது. சில பெண்களுக்குக் கருச்சிதைவு ஏற்படும். சில பெண்களுக்கு பிள்ளைகள் இறந்து பிறக்கின்றது. எனவே சலரோகத்தைக் கட்டுப்படுத்தும் வழிகளை மேற்கொள்ள ஒவ்வொருவரும் மிகக் கவனமெடுக்கவேண்டும் என்று கூறிஞர்.

டாக்டர் முருகானந்தன் நன்றியுரை கூறிஞர்.

## ''சத்தியம் அன்புவழி செயல்படுங்கள்''

(சுழிபுரம்)

''சத்தியம், அன்புவழி நின்று செயல்படுங்கள். நிச்சயமாக நல்ல சமுதாயம் ஒன்றை நீங்கள் தோற்றுவிக்கலாம். எங்கள் சமயதத்துவத்தை நாம் நன்கு கற்று வருவதோடு அதன்படி ஒழுகவும் வேண்டும். அன்புடையவர்களாகவும், பண்புடையவர்களாகவும் நாம் வாழ சமயவாழ்வு தாமாகவே எமக்கு வந்துசேரும்''

இவ்வாறு பண்ணுகம் ஹிந் சமய விருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்து சிறப்புரை யாற்றிய சுழிபுரம் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. ந சிவரஞ்சன் பேசுகையில் குறிப்பிட்டார்

சங்கத் தலைவர்திரு ஆ உமாமுகன் தலைமையில் பண்ணுகம் ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய மண்டபத்தில் கூட்டம் நடைபெற்றது.

பண்டிதர் ப. இராசகுரு பேசுகையில்:- ஏடடளவில் படிக்கும் சமயக்கல்வி இன்றைய மாணவர்களுக்குப் பரீட்சையில் சித்தியடைய மட்டுமே உதவுகின்றது. சமய வாழ்வுக்கு, சமயக்கோட்பாடுகளுக்கு அமைவதாக இல்லை எமது அரும்பெரும் சமய ஞானத்தைக் கற்றுச் சிறப்போடு வாழ எமது வருங்கால சமுதாயத்தை நாம் தயார் செய்யவேண்டும் என்று கூறிஞர்

திரு க. வாமதேவன் பேசுகையில்:- ''எம்மை நாம்முதலில் புனிதர்களாக ஆக்கிக் கொள்ளவேண்டும் சமய தீட்சையைப் பெற்று ஒழுக்கத்துடன் வாழ நாம் தயாராக வேண்டும். ஆத்மபலம் ஏற்பட்டால் சிறப்போடு வாழலாம். சமயகுரவர்களை, குருபூசை, சிரமதானம், கோவில் வீதிகளைச் சுத்தம் செய்தல் போன்ற கருமங்களோடு எமது ஆத்மீகப்பலம் மேன்மையுற வழிபாடு செய்யவேண்டும். வழிபாட்டிஞல் மனம் சாந்தியடையும். ஒரு குறித்த நேரமாவது அமைதியாக வாழலாம்'' என்று கூறிஞர்.

புதுவருட உத்தியோகத்தர்கள் தெரிவும் நடைபெற்றது.

## குடும்பநலத் தொண்டர் மகாநாடு

(வவனியா)

இலங்கை குடும்பத் திட்டச் சங்க வவனியா பகுதி தொண்டர்களுக்கான இவ்வருட மாநாடு எதிர் வரும் டிசம்பர் 16ம் திகதி வவனியாவில் நடைபெறவுள்ளது

குடும்ப நலத் தொண்டர்களுக்கான இம் மாநாட்டில் 40 திட்டப் பிரதேசங்களிலிருந்து சுமார் 600 தொண்டர்கள் பங்கு பற்றுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது

தொண்டர்களை கௌரவிக்கும் நோக்குடனேயே குறித்த மாநாடு நாடு பூராவும் நடத்தப்படுகிறது

முன்னர் பிராந்திய மட்டத்தில் நடத்தப்பட்ட இம் மாநாடு மாவட்ட மட்டத்தில் இப்போது நடாத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இம் மாநாட்டுக்கு பிரதம அதிதியாகவவனியா அரசாங்க அதிபரை அழைக்க வவனியா மாவட்ட குடும்ப நலக்குழு திட்டமிட்டுள்ளது

. வவனியாவிலுள்ள குழு கடந்த வாரம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது

தலைவராசபதில் நீதிவான்திரு வி. ஆர் வில்வராஜா தெரிவு செய்யப்படடுள்ளார்.

மாநாடு தொடர்பான ஏற்பாடுகளை செய்வதற்கு குழு செயலாளர் திரு கோ நடேச பிள்ளை பணிக்கப்பட்டுள்ளார்

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத் தலைமை காரியாலய திட்டப பணிப்பாளர் திரு. திசநாயக்கா, பயிற்சிப்பகுதி பணிப்பாளர் திரு. ஏ. ஜே. பெனடிக். தகவல் உதவிப் பணிப்பாளர் திருமதி. யோகா பாலச்சந்திரன் ஆகியோரும் மாநாட்டில் கலந்து கொள்வார்கள் என தெரிவிக்கப்படுகிறது.

## ஆங்கிலம் கற்க வாய்ப்பு

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி, மல்லாகம் இந்துக் கல்லூரி, நாவற்குழி மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் வாரஇறுதி நாட்களில் விசேட தகைமையுள்ள ஆசிரியர்களால் ஆங்கிலம் போதிக்கப்பட்டு வருகின்றது.

இதேபோன்று ஏனைய பாடசாலைகளிலும் ஆங்கிலம் கற்பிக்க வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

ஒவ்வொரு பாடசாலைகளிலும் 40 மாணவர்களுக்குக் குறையாது ஆங்கிலம் கற்பிக்கக்கூடிய வய்ப்பை ஏற்படுத்த அதிபர்கள் கூடிய கவனமெடுத்தல் வேண்டும் பயிற்சி முடிவில் கல்வி அமைச்சிஞல் ஒழுங்கு படுத்தப்படுகின்ற பரீட்சையில், தேறியவர்களுக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ள சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன என்பதை வளர்ந்தோர் கல்வி அதிகாரி வளர்ந்தோர்க்கான கருத்தரங்கொன்றில் குறிப்பிட்டார்.

(கி)

## பச்சிலைகளில் உயிர்ச்சத்து

[யாழ்ப்பாணம்]

''சண்டியிலை முருங்கையிலை போன்ற பச்சிலைகளில் ஒன்றை யாவது எந்நாளும் எமது உணவில் சேர்த்துக்கொண்டால், நாம் சுகதேகிகளாக வாழமுடியும்'' என்று அல்வாய் பொதுச் சுகாதாரப் போதனசிரியர் திரு ஜே. எஸ். செல்வரத்தினம் ஆரம்ப சுகாதாரக் கவனிப்புப் பற்றிய செயற்குழு அங்குரார்ப்பணக் கூட்டத்தில் கூறிஞர்.

இக் கூட்டம் கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் அதன் அதிபர் திரு எஸ் சிவபாதம் தலைமையில் நடைபெற்றது. கரவெட்டி தெற்கு வட்டாரத்தின் குடும்பநலச் சேவையாளர் செல்வி யோகராணியின் முயற்சியிஞல் கூட்டப்பட்ட இக்கூட்டத்தில் திருவாளர்கள் எஸ். சிவபாதம், விஹோறி, சின்னத்தம்பி, திருமதி மேரி இரத்தினம், சற்குணதேவி, கோகுலதீபம், இராசேஸ்வரி ஈஸ்வர ஞானம் ஆகியோர் அடங்கிய சுகாதாரச் செயற்குழுஒன்றும் அமைக்கப்பட்டது. (ப)

# 'அந்த'ச் சடலங்கள் அரச செலவில் அடக்கம்

(வவனியா)

வவனியாஆஸ்பத்திரி பிரேத சாலையில் கடந்த வாரம் அடையாளம் காண்பதற்காக வைக்கப்பட்டிருந்த மூன்று இளைஞர்களின் சடலங்களும் அரசாங்க செலவில் அடக்கம் செய்யப்பட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.

மூன்று சடலங்களையும் இராணுவத்தினர் கொண்டு வந்து ஆஸ்பத்திரி பிரேதசாலையில் சேர்த்திருந்தது தெரிந்ததே.

சடலங்களில் துப்பாக்கி சூடு காணப்பட்டது. தலைப்பகுதி சிதைந்து காணப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மூன்று சடலங்களும் பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. உத்தியோக பூர்வமாக அடையாளம் காணப்பட்டதாக தெரியவில்லை என ஊர்ஜிதம் அற்ற தகவல் ஒன்று கூறியது.

# மானிப்பாய் பகுதியில் சுகாதாரம் பாதிப்பு

(மானிப்பாய்)

மானிப்பாயின் சில பகுதிகளில் சுகாதாரம் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. பொறுப்பற்ற முறையில் வீடுகள் உள்ள பகுதிகளில் குப்பை கூளங்களை சுகாதாரப்பகுதி ட்ராக்டர் கொண்டு வந்து கொட்டிவிட்டுச் செல்வதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய் வேலக்கை பிள்ளையார் கோவிலுக்குச்சமீபமாக தெற்கு நவாலிக்குச் செல்லும் வீதியின் நுழைவாசலில் வீடொன்றுக்குப் பக்கத்திலுள்ள வளவுக்குள் குப்பை கூழங்களைக் கொட்டி விட்டுச் செல்கின்றனர்.

அந்த வீட்டின் கிணறு இதற்கு பக்கத்தில் இருப்பதால் சுகாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதென்றும் இவ்விதமான பொறுப்பற்ற நடவடிக்கையை நிறுத்துமாறும் புகார் செய்யப்பட்டுள்ளது.

மற்றும் சில பகுதிகளிலும் இவ்விதமான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதாகக் கவனத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது

கிளிநொச்சி

# தெங்கு கூட்டுறவு சங்கத்துக்கு ரூ 25,000 வைப்புநிதி!

[கிளிநொச்சி]

மிகக் குறுகிய காலத்தில் கிளிநொச்சி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க பணியாளர் சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம் பெரு வளர்ச்சி கண்டுள்ளது மகிழ்ச்சியை தருகிறது. இதையிட்டு பெருமிதம் கொள்ளும் நான் இச்சங்க உறுப்பினர் நலன்கருதி வங்கியில் இருந்து 25 ஆயிரம் ரூபாவை வைப்பு நிதியாக பெற்றுத்தர ஆவன செய்வேன்

இவ்வாறு கிளிநொச்சி தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்க பணியாளர் சிக்கனக்கடனுதவிக் கூட்டுறவுச் சங்க பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் கூட்டுறவுஉதவி ஆணையாளர் திரு. வேலாயுத பிள்ளை குறிப்பிட்டார்

பிரஸ்தாப சங்க பணிமனையில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு திரு. ச. முத்துக்குமாரசாமி தலைமை வகித்தார்.

வைபவத்தில் ஏனைய பிரதம விருந்தினர்களாக கிளிநொச்சி தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கத்தலைவர் ஸ்ரீ ஜெயச்சந்திரன், திரு நாயகம் சிற்றம்பலம், டாக்டர் கே. வி கே. திருலோகமூர்த்தி, கூட்டுறவுப் பரிசோதகர் ஸ்ரீ சிவலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றிஞர்கள்.

கூட்டுறவுப் பரிசோதகர் திரு. சிவலிங்கம் தனதுரையில்:- கூட்டுறவுப் பணியாளர்கள் இவ்வாருன சங்கங்களை இயக்குவதன்மூலம் பலவிதமான நன்மைகளை அனுபவிக்க ஏதுவாகிறது. கிளிநொச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரை இச் சங்கமே வளர்ச்சியில் முன்னணி வகிக்கிறது என்ருர்.

சமூக சேவையாளர் நாயகம் சிற்றம்பலம் பேசுகையில்: சமுதாயத்தில் ஒடுக்கப்பட்டமக்கள் என்ற தாழ்வுமனப்பான்மையை மறந்து எல்லோரும் ஓர் குலம் அது தமிழ்க் குலம்என்ற நோக்கில் முன்னேறிச் செல்வோம் என்ருர்.

சங்கத் தலைவர் ஸ்ரீ ஜெயச்சந்திரன் பேசுகையில்:- பணியாளர் நன்மைகருதி எம்மாலான உதவிகளைச் செய்ய என்றும் சித்தமாக உள்ளோம். ஐக்கியமே பலம் மனேதிடத்துடன் ஒன்றுபட்டுசெயலாற்ற முன்வாருங்கள் என்ருர்.

புதிய நிர்வாகிகள் தேர்வின்போது, பின்வருவோர் தெரிவாஞர்கள் தலைவர்:- ச முத்துக்குமாரசாமி மீண்டும் தெரிவாஞர் பொருளாளர்:- மிக்கல் மரியதாஸ், உபதலைவர்;- மா. மகேந்திரன் உறுப்பினர்கள்:- செல்வரத்தினம், லோறன்ஸ். மகேந்திரன், செல்வி எலிசபெத், சிவகடாட்சம்.

## இவர்களுக்கு அழைப்பாணை

[சாவகச்சேரி]

இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 13-ம் திகதி கைதடிச் சந்தியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி பலியானவர்களை தெல்லிப்பளை அரசினர் ஆஸ்பத்திரியில் அடையாளம் காட்டிச் சடலங்களைப் பொறுப்பேற்ற கைதடிப்பகுதியைச் சேர்ந்த எட்டுப் பேர்களையும் -பொலிஸ் தரப்பு சாட்சிகளாக, கொழும்பு உயர் நீதிமன்றத்தில் ஆஜாராகும்படி யாழ் பொலிஸ் அத்தியட்சகர் கேட்கப்பட்டுள்ளார்

இவ்வாறு அழைக்கப்பட்டவர்கள் கைதடி வடக்கு-கிழக்கு கிராமசேவை அலுவலர் திரு. வே. மார்க்கண்டு, தென்மராட்சி ப நோ. கூ சங்கத் தலைவர் திரு சு. கணேசன், திருவாளர்கள்:- எஸ் கதிரவேல் கா தேவராசா, வ. வைரமுத்து, எஸ் செல்லத்துரை. க செல்வராசா, எஸ் சுப்பிரமணியம் ஆகியோராவர்.

இவர்களுக்கான அழைப்பாணைகளை யாழ் பொலிஸ் அத்தியட்சகர் கிராமசேவை அலுவலர்ஊடாக அனுப்பி வைத்திருந்தார்.

# யாழ் மாவட்டத்தில் ஆசிரியர் பற்றுக்குறை

[ஊரெழு]

''செல்வங்களுள் பெறுமதியானது கல்விச் செல்வம். என்றும் நிலையானதும், நீடித்து பயன் தரக்கூடியதுமன அதனை மாணவர்கள் ஒவ்வொருவரும் நன்கு அனுபவிக்க வேண்டும். எத்தகைய இடையூறுகள் நேர்ந்தாலும் கல்வியில் சளைக்காது முன்னேற்றமடைந்தால், அதுவே அவர்கள் வாழ்வுக்கு நல்லவழிகாட்டியாக இருக்கும். இன்று ஆசிரியர் பற்றுக்குறை யாழ். மாவட்டத்தைப் படுமோசமாகப் பாதித்திருக்கிறது. இக்குறையைத் தீர்க்க நாம் முயன்று வருகிறோம்''

ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசிய யாழ் கல்வி அலுவலக பிரதம கல்விஅதிகாரி திரு இ. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் திரு வீ த. திருநாவுக்கரசு [நாவேந்தன்] தலைமையில் நடைபெற்ற மேற்படி பரிசளிப்பு விழாவில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்ட யாழ் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திரு எஸ் சிவதாசன் பேசும்போது இன்று மாணவர்கள் பாடசாலைக்கு அமைதியாகச் செல்ல முடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது கல்வி நிலையங்கள், நூலகங்கள் எரிக்கப்பட்டிருக்கின்றன. கல்வி கற்பதற்கு பெரும் இடையூறு உருவாகியுள்ளது. எத்தகைய தடைகள் ஏற்பட்டாலும் நாம் கல்வியை இழக்க முடியாது என்று கூறினார்.

வித்தியாலய அதிபர் பரிசளிப்பு விழா அறிக்கையைச் சமர்ப்பித்து, ஸ்தாபகர் நினைவுரையையும் நிகழ்த்தும்போது ''சேர். பொன் இராமநாதன் எழுப்பிய கல்விச் சின்னங்களை பேணிப்பாதுகாத்த பெருமைக்குரிய பேரறிஞராக கலாநிதி நடேசபிள்ளை அவர்களின் நினைவுச்சின்னமாக எமது பாடசாலை விளங்குவதில் நாம் பெருமையடைகிறோம்,' என்று குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி மு. சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்கினர் வித்தியாலய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

## இந்திராவுக்கு அஞ்சலி

(உடுவில்)

''ஷேக்ஸ்பியர் எழுதிய ஹம்லட், யூலியசீசர் போன்ற நாடகங்கள் மக்கள் மனதில் குடிகொண்டுள்ள பொறுமை, குரோதமனப்பான்மை அதிகாரப்போட்டி போன்ற குறை இயல்புகளை எடுத்துக்காட்டுகின்றன. யூலியசீசர் நாடகத்தை மீண்டுமொருமுறை உண்மை நிலையில் செயல்படுத்திக் காட்டியுள்ளார்கள் இந்திராகாந்தியின் கொலைஞர்கள்''

மானிப்பாய் மெமோரியல் ஆங்கில பாடசாலை மாணவர்கள் நடாத்திய இந்திரா காந்தி அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிப் மேற்படி பாடசாலை அதிபர் திரு. வி பொன்னுத்துரை இவ்வாறு கூறினர்.

மாணவர்கள் இத்திரா காந்திக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிட மௌனப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

இந்திரா காந்தியின் கொள்கைகளையும் செயற்பாடுகளையும் விளக்கி ஆசிரியர்கள் திரு. அ. மு. அருணசலம், திருமதி. பி. மகாதேவன் ஆகியோரும் மாணவர்சள் சார்பில் வி. முருகதாஸ், எஸ் சிறீதரன் ஆகியோரும் உரையாற்றினர்.

## அன்பால்...

[9ம்பக்க4ம் கலத் தொடர்ச்சி)

செல்வி நவரட்ண சிங்கம் அன்பு இரக்கம், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு, ஒழுங்கு என்பவற்றின் இருப்பிடமாக திகழ்பவர்.

எந்த விடயத்தையும் மிக நுட்பமாகவே ஆராயும்திறன் செல்வி நவரட்ண சிங்கத்திற்கு உண்டு. பரிசோதனைக்குழுவில் செல்லும் பொழுதும் போட்டி நிகழ்ச்சிகளையும் வினுப்பத்திரங்களையும் தயார் செய்யும் பொழுது மிகமிக நுட்பமாகவே ஆராய்ந்து பரிசீலனை செய்வார்.

கல்வியதிகாரியாக பணியாற்றும்போது கல்வித்திணைக்களத்தில் பணிபுரியும் ஆண்கள் மத்தியிலே தயாகவும், சகோதரி போலவும் அன்புடனும் பன்போடும் நடந்து கொள்பவர். அவர் எல்லோரிடமும் பணிவுடன் பழகுபவர்,

இவ்வாறாக விசேடமாக யாழ்ப்பாணம் ஆங்கிலத்துறைக்கும் ஏனைய கல்வித்துறை வளர்ச்சிக்கும் அவர் ஆற்றிய சேவைகள் வார்த்தையில் அடக்க இயலாது யாழ். மாவட்ட சகல ஆங்கில ஆசிரியர்கட்கும் கலங்கரை விளக்கமாகத் திகழ்பவர். எவரும் அவரை அணுகி தயக்கமின்றி கல்விசம்பந்தமான குறைகளை கூறும் வண்ணம் அவர் பொறுமையுடனும் அன்புடனும் செவிசாய்ப்பர்.

ஓய்வுபெற்ற காலத்திலும் மேலும் யாழ்ப்பாண மக்களுக்கு சேவை புரியும் வண்ணம் அவரை நீடூழிகாலம் வாழ வேண்டுமென ஆசிரிய ஆலோசகர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் சார்பில் இறைவனை பிரார்த்திக்கிறேன்.

சி. தெய்வதவபாலன்

## இரு கூட்டுறவு சங்க கிளைகளில் திருட்டு

(ஊரெழு)

ஊரெழுவிலுள்ள இரண்டு கூட்டுறவுச் சங்க விற்பனை நிலயங்களில் ஏககாலத்தில்பொருட்கள் களவாடப்பட்ட சம்பவம் நடைபெற்றுள்ளது.

வலிகிழக்கு தென்பகுதி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்தின் கீழுள்ள மேற்படி விற்பனை நிலையங்களுள் ஒன்றின் கதவை உடைத்து அங்கிருத்த பிடவைகளையும் உணவுப் பொருட்களையும் திருடியிருப்பதுடன் மற்றவிற்பனை நிலயத்திற்குப் பின்பக்கமாக அமைந்திருக்கும் களஞ்சிய மண்டபமொன்றின் சுவரை உடைத்து அதன் வழியாக உள்ளே புகுந்த திருடர்கள் அங்கிருந்த இரண்டு சாக்கு உருளைக் கிழங்கை மட்டும் திருடிச் சென்றிருப்பதாகவும் சொல்லப்படுகிறது.

திருடப்பட்ட பொருட்களின் பெறுமதி சுமார் 12.000 ரூபாவுக்கும் அதிகமாக இருக்கலாம் எனத் தெரியவருகிறது. இது தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரும் பொதுமுகாமையாளரும் விற்பனை நிலயங்களுக்கு விஜயம் செய்து களவு தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டனர்.

## கிளிநொச்சியில்

(1-ம் பக்க3ம்கலத்தொடர்ச்சி)

ருந்த இரண்டு இளைஞர்கள் ராணுவத்தினரைக் கண்டதும் சைக்கிளை விட்டுவிட்டு தப்பி ஓடிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்த மோட்டார் சைக்கிளை ராணுவத்தினர் பின்னர் டிரக்டர் ஒன்றில் கொண்டு சென்றனர்.

## ஐந்து பொலிசார்

(1ம் பக்கம் 5கலத் தொடர்ச்சி)

னர்.

இவர்கள் சிகிச்சையின் பின்னர் வெளியேறிவிட்டதாக சம்பந்தப்பட்ட இடங்களில் இருந்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தின் பின்னர் அடுத்த ஜீப் வண்டியில் வந்த அதிரடிப்பிரிவு பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்தனர்.

உடனடியாக யாழ் உதவிப் பொலிஸ் அதிபர் தலைமையிலான பொலிசார் புகையிரத நிலையத்துக்கு அழைக்கப்பட்டனர்.

பிரயாணிகள் எல்லோரையும், புகையிரதநிலையத்திலுள்ள அறைகளில் பாதுகாப்பாகவிட்டு பொலிசார் நின்றனர்.

12 - 30 மணியளவில் கொடுத்த தகவலின் பேரில் இன்ரசிற்றி ரயில் யாழ். புகையிரத நிலையத்தை வந்தடைந்ததாகவும், 1-30 மணிக்குப் புறப்பட்டதாகவும், புகையிரத நிலைய உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். இக் குண்டு வீச்சுச் சம்பவத்தைத் தொடர்ந்து யாழ். நகருக்கு விரைந்த இராணுவத்தினருப் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். பின்னர் குருநகர் இராணுவ முகாமுக்குத் திரும்பிக் கொண்டிருக்கும் பொழுது வீதியோரங்களிலும் சுட்டுக் கொண்டே சென்றதாகக் கூறப்படுகிறது.

தெல்லிப்பளை, யாழ் புகையிரதநிலையச்சம்பவங்களால் யாழ் நகரில் பதட்டநிலை ஏற்பட்டது. இப்படியான சம்பவங்கள் நடைபெறும் நாட்களில் இடம்பெறுவதுபோல கடைகள் இழுத்து மூடப்பட்டன; வாகனங்கள் விரைந்தன.

சிலமணித்தியாலங்களின் பின் மீண்டும் பொது சனங்களினதும் வாகனங்களினதும் நடமாட்டம் அதிகரிக்கத் தொடங்கியது. (மா)

## மன்னாரில்

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி)

இவரின் பெயரைக்கேட்டவுடன், ஆட்களைக்காட்டிக் கொடுப்பதாகக் கூறி அவரின் வயிற்றில் இளைஞர்கள் றிவோல்வரை வைத்தனர்.

மன்னார் மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் ஐப் முஸ்தபா தலையிட்டு சமரசத்தை ஏற்படுத்தினார்

இதனையடுத்த ஜீப்பிலுள்ளவர்களை இறக்கிவிட்டு, இளைஞர்கள் மன்னார் பக்கமாகஜீப்பைக் கடத்திச் சென்றனர்

இவர்கள் ஜீப்பில் சென்று கொண்டிருந்தபோது, எதிரே வந்த மற்றொரு கச்சேரி ஜீப்பையும் இந்த இளைஞர்கள் வழிமறித்தனர்.

இளைஞர்களில் ஒருவர் றிவோல்வரினால் சத்தவெடி வைத்தார். இந்த ஜீப்பையும் இளைஞர்கள் கடத்திக்கொண்டு சென்றனர் அப்போது மாந்தைக்கு விசாரணைக்கு வந்த விசேட பொலிஸ் பிரிவின் ஜீப்பிற்கு இந்த இளைஞர்கள் ஜீப்பில் சென்றுகொண்டே குண்டுகளை எறிந்தார்கள்

இதனையடுத்துப் பொலிசார் இளைஞர்களின் ஜீப்பைத் துரத்திச் சென்றனர். இளைஞர்கள் தாங்கள் சென்ற இருஜீப்வண்டிகளையும் காட்டுப்பகுதியில் விட்டுவிட்டு ஓடி மறைந்துவிட்டார்கள். காட்டுப்பகுதியில் இளைஞர்களுக்கும் பொலிசாருக்குமிடையே துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

இளைஞர்களால் காட்டுப் பகுதிகளில் விடப்பட்ட ஜீப் வண்டிகளை இராணுவத்தினர் மீட்டுச் சென்றனர்

இதனையடுத்து அடம்பன் பகுதியில் இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகக் கூறப்பட்டது

இத்துப்பாக்கிப் பிரயோகத்தின்போது பொதுமக்களில் 6பேர் பலியாகியிருக்கலாமென கூறப்படுகிறது.

### பதட்டம்

இச்சம்பவங்களையடுத்து மன்னாரில் நேற்றுப் பதட்டம் நிலவியது. கடைகள் யாவும் அரைக் கதவில் திறந்திருந்தன. அரச ஊழியர்கள் நேரத்துடனேயே வீடு திரும்பினர். சனநடமாட்டமின்றி வீதிகள் வெறிச்சோடிக் காணப்பட்டன.

## குண்டு வெடிப்புச்

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி)

லிப்பளைச் சந்தியிலிருந்து திரும்பி முகாம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பொழுது வறுத்தலைவிழான் என்னுமிடத்தில் வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்ததில் ஜீப் வண்டியிலிருந்த பலாலி இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உட்பட 5 இராணுவத்தினர் படுகாயமடைந் தாகவும் உடனடியாக விமானமூலம் கொழும்பு விஷேச ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபொழுது இராணுவப் பொறுப்பதிகாரியும் இரு இராணுவ வீரர்களும் இறந்துவிட்டதாகவும் இராணுவ வட்டாரங்களிலிருந்து தெரியவந்துள்ளது

குண்டு வெடித்ததைத் தொடர்ந்து, துப்பாக்கிச் சத்தங்கள் தொடர்ந்து கேட்ட வண்ணமிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டதால் வீதி வெறிச்சோடிக் காணப்பட்டது. பீதியடைந்த குடியிருப்பாளர்கள் தங்கள் வீடுகளை விட்டு வேறிடங்களை நாடிச்சென்றனர்.

முன்னும் பின்னும் கவச வண்டிகளும் நடுவில் ஜீப் வண்டியும் சென்று கொண்டிருந்த பொழுதே குண்டு வெடித்ததாகக் கூறப்படுகிறது

இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை இராணுவத்தினர் இச்சம்பவம் நடைபெற்ற இடத்தைவிட்டு நகரவில்லை என்று தெரியவந்துள்ளது.

பொதுமக்களுக்கும் உயிர்ச்சேதமோ- காயங்களோ ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டபோதிலும் எவரும் இதுவரை அரசினர் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் படவில்லை என்றும் ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.

உடனடியாக சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு ஹெலிகெப்டர் பறந்து நிலைமைகளை அவதானித்தது

இச்சம்பவம் கொழும்பிலுள்ள பாதுகாப்பு அமைச்சுக்குத் தெரிவிக்கப்பட்டதும், அங்கு பாதுகாப்பு சம்பந்தமான மகாநாட்டுக்கு சென்றிருந்த யாழ். மாவட்ட இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனிவரத்ின யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்புச் சம்பவம் நடைபெற்ற சூழல் பகுதியை ஆயுதப்படையினர் சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்

இப்பகுதி வீடுகளுக்கு தீவைக்கப்பட்டதால் தீ ஜுவாலை விட்டு எரிவதாகவும் வானளாவ ஒரே புகை மண்டலமாகக் காட்சியளிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### யாழ். அரச அதிபர் இன்று திரும்புகிறார்

பாதுகாப்பு மகாநாட்டுக்குச் சென்றிருந்த யாழ். மாவட்ட செயலாளரும்-யாழ். அரசாங்க அதிபருமான திரு எம். பஞ்சலிங்கம் குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக யாழ். மாவட்ட பாதுகாப்புக் கருதி இன்று யாழ்ப்பாணம் திரும்புவதாக யாழ். செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதுவரை சில லொறிகளும், கிறேசர் தொழிற்சாலையும், சில வீடுகளும் தீயினால் எரிந்து சாம்பலானதாகப் பிந்திவந்த செய்திகள் தெரிவித்தன.

வீட்டு மதில்களும் பீரங்கி வண்டியால் தாக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(மா)


ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-00, 4-30, 6-30
FUTURE WOMAN
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

றீகல் [யாழ் நகர்]
10-30, 2-15, 4-30
SHARKY'S MACHINE

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல் நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
சிவாஜி, பாரதி, நாகேஷ், மனோகர்
தங்கச்சுரங்கம்
ஈஸ்ட்மென் கலர்
(புதிய பிரதி)

ராஜா (யாழ். நகர்)
Daily 10-30, 2-00, 4-30 6-15
Jim Gelly—Jim Brown
BLACK BELT JONES
(color)
A Super Action Karate Film
சிறந்த கராட்டி படம்)

சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-30, 4-45
Brooke Shields
Christopher Atkins
"THE BLUE LAGOON"
கப்பல் விபத்தில் தப்பி ஒரு தீவில் கரைசேர்ந்து வளர்ந்த இரு சிறுர்களின் காதல் காவியம்.
கண்டிப்பாக வயதுவந்தவர்கட்கு மட்டும்.

மனோகரா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
2வது கொட்டகை நிரம்பிய வாரமாக யாழ். நகரில் என்றுமே இல்லாதளவு மாதர்கள் பெரும் திரளாக பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் ஓர் திரைப்படம் தான்
K. பாலச்சந்தரின்
பூவிலங்கு
[கலர்]
ஏமாற்ற மடையாமல் இன்றே பார்த்துமகிழுங்கள்

வின்ஸர் (யாழ்)
10-30, 2-30, 6-15,
ரஜனிகாந்த்-ராதா-சரிதா சில்க்-தேங்காய்-மனோரமா மூர்த்தி-Y. G. மகேந்திரன்
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்)
முற்றிலும் மாறுபட்ட பாணியில் உருக்கமுடன் நடித்து சகோதரபாசத்தை எடுத்துக்காட்டும் ஒப்பற்ற காவியம்!

லிடோ சினிமா
தினசரி 10 30, 2-30, 6-30
சிவாஜி — விஜயா
தீர்க்கசுமங்கலி

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30 a.m. 2-15 p m.
4-30 p m, 6-15
Debra Winger,
Mark Keyloun
MIKE'S MURDER
(Adults Only)

# பிக்குவைக் கொலை செய்ய முயற்சி: பொலிஸ்உயர்அதிகாரி தாக்கப்பட்டார்

[காலி]

பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் துப்பாக்கி சகிதம் பௌத்த ஆலயம் ஒன்றுக்குள் புகுந்து அவ்வாலயத்தின் பிரதான பிக்குவைச் சுட்டுக் கொல்ல முயற்சிசெய்ததாகவும், இதனால் கோபமுற்ற பொதுமக்கள் அவ்வதிகாரியை நையப்புடைத்ததின் விளைவாகஅவ்வதிகாரி இப்பொழுது காலி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அல்பிட்டிய கனேகொட ரஜமகாவிகாரையில் இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. ''இந்த நாய்கள் எங்கே'' என்று கூறியபடி விகாரையின் கதவில் இப பொலிஸ்அதிகாரி சாலால் உதைத்ததாகவும் பின்னர் பிரதம விகாராதிபதி இருந்த திக்கை நோக்கி பல தடவை பிஸ்டல் துவக்கினல் சுட்டதாகவும் கூறப்படுகின்றது.

பொதுமக்களால் தாக்குதலுக்குள்ளான இப் பொலிஸ் அதிகாரி இப்போது ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிறார்.

இவரது நடத்தைகுறித்து விசாரிக்கும்படி பொலிஸ் உயர் அதிகாரிகளுக்கு பொலிஸ் மா அதிபர் திரு. ருத்ரா ராஜசிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

## மலையக எழுத்தாளர் வேலுப்பிள்ளை காலமானர்

(கொழும்பு)

பிரபல ஈழத்து எழுத்தாளரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான திரு. பி. வி. வேலுப்பிள்ளை காலமானர். இறக்கும்போது இவருக்கு வயது 70 ஆகும்,

மலையக எழுத்துத்துறையில் பல ஆக்கங்களை படைத்துள்ள இவரின் இலக்கிய பணியை கலாச்சார அமைச்சும் ஏனைய தாபனங்களும் போற்றி கௌரவித்தமை குறிப்பிடத்தக்கது.

## கிளிநொச்சி சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நடைபெற்ற அண்மைச் சம்பவங்கள் குறித்து கிளிநொச்சி பிரஜைகள் குழுவினர் அரச அதிபரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

அதிரடிப்படைப்பிரிவு உதவிச் சுப்பிறிண்டனையும் இவர்கள் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

குழுத்தலைவர் அருட்திரு. பயஸ் அடிகளார், செயலாளர் திரு எஸ். எஸ். செல்லையா, உபதலைவர் டாக்டர் சுப்பையா ஆகியோரடங்கிய குழுவினரே அரச அதிபரைச் சந்தித்தனர்.

இதேவேளை, ஜனதிபதிக்கும் தமிழ்ப்பகுதி பிரஜைகள் குழுவினருக்குமிடையே நடக்கவுள்ள பேச்சு வார்த்தையில் கிளிநொச்சி பிரஜைகள் குழுவையும் சேர்க்குமாறு பிராந்திய அபிவிருத்தி அமைச்சரைக கேட்டுள்ளனர்

## பிரதமர் ரஜீவை எதிர்த்து மேனகா போட்டி?

(அ. கனகசூரியர்)

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் இந்தியப் பாராளுமன்றப் பொதுத்தேர்தலில் பிரதம திரு ரஜீவ் காந்தியைஎதிர்த்து திருமதி மேனகா காந்தி போட்டியிடுவது பெரும்பாலும் உறுதியாகி விட்டது. புதுடில்லி செய்தியாளர்களிடம் மேனகாவே இதுபற்றி கூறியிருக்கிருராம்.

''உத்தரப் பிரதேசத்திலுள்ள அமீதி தொகுதியில் போட்டியிடவிருக்கும் ரஜீவ் காந்தியை எதிர்த்துப் போட்டியிடுவதற்கு எதிர்க்கட்சிகளின் ஒரேயொரு வேட்பாளராக மேனகா காந்தியை நிறுத்துவதற்கு முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன.

உத்தரப் பிரதேசத்தில் தனது கட்சி வலுப்பெற்றிருப்பதாகவும், குறிப்பாக அமீதி தொகுதியில் ரஜீவ் காந்தியை தன்னல் தோற்கடிக்க முடியும் என்று தான் உறுதியாக நம்புவதாகவும் புதுடில்லி செய்தியாளர்களிடம் திருமதி மேனகா காந்தி கூறியுள்ளார்.

## கலிபோர்னியாவில் சிரேஷ்ட பொலிஸ் அதிபர் சண்முகம் காலமானர்!

(கொழும்பு)

இலங்கையின் சிரேஷ்ட்ட பொலிஸ் அதிபர் திரு முருகேசு சண்முகம் கலிபோர்ணியாவில் நேற்றுமுன்தினம் காலமானர்.

திரு. சண்முகம் சிலமாதங்களுக்கு முன்னர் விசேட குற்றப் புலனாய்வுத்துறையில் மேல் படிப்பை மேற்கொள்ளும் வகையில் அங்கு சென்றிருந்தார்

இருபிள்ளைகளுக்குத் தந்தையான இவர் ஒரு பட்டதாரியாவர். உதவிப் பொலிஸ் அதிபர் பொலிஸ்சேவையில் சேர்ந்து சிரேஷ்ட பொலிஸ் அதிபராகப் பணிபுரிந்தார். இலங்கை திரும்பியதும் விரைவில் இவர் உதவிப் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்படவிருந்தார்.

திரு, சண்முகத்தின் தந்தையார் ஒரு இளைப்பாறிய பொலிஸ் இன்ஸ்பெக்டராவார் இவரின் சகோதரர் திரு. மகேஸ்வரன் ஒரு பொலிஸ்அதிபராகதொடர்ந்து பதவியிலுள்ளார். (கி)

## விசாரணை ஒத்திவைப்பு

(வவனியா)

வவனியா பம்பைமடு இ. போ. ச பஸ் விபத்து இரட்டைக்கொலை வழக்கு வவனியா மேல்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டு பின் எதிர்வரும் ஜனவரி 10-ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது இவ்வழக்கு ஜுூரர் சபையின்றி மேல் நீதிமன்ற நீதிபதி ஜே. ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் விசாரணை செய்யப்படவுள்ளது.

30 - 1 - 1983 இல் இ. போ. ச. பஸ்சை அதிவேகத்தில் அவதான மின்றிச் செலுத்தி முத்து சௌமியமூர்த்தி, சி. வேலு ஆகிய இருவரையும் மோதிக் கொலை செய்ததாக இ. போ.ச. சாரதியான விநயகமூர்த்திக்கு எதிரான குற்றக் சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

## ''இந்தியாவை பிளவுபடுத்த எந்தசக்தியாலும் முடியாது'' பிரதமர் ரஜீவ் பேச்சு

(புதுடில்லி)

''சில நாடுகள் எவ்வளவுதான் முயற்சிகளை மேற்கொண்டாலும் இந்தியா ஒருபோதும் நெருக்குதல்களுக்கும், பயமுறுத்தல்களுக்கும் அடிபணியாது, இந்தியாவை பிளவுபடுத்த மேற்கொள்ளப்படும் எந்த முயற்சிகளையும் முறியடித்து சகல இன மக்களும் ஒற்றுமையுடனும, ஒருமைப்பாட்டுடனும் வாழும் வலுவான, வளமான இந்தியாவை உருவாக்குவதுதான் திருமதி இந்திராகாந்தியை கொலைசெய்தவர்கள் மீது நாம் தீர்த்துக்கொள்ளும் எதிர் நடவடிக்கையாக இருக்கும்'' என்று இந்தியப் பிரதமர் திரு. ரஜீவ்காந்தி குறிப்பிட்டுள்ளார்.

மறைந்த இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் 67வது பிறந்ததினத்தையொட்டி புதுடில்லியில் ஏற்பாடுசெய்திருந்த மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இக்கூட்டத்தில் சுமார் 5 லட்சம் மக்கள் வரையில் கலந்து கொண்டனர்.

திருமதி இந்திரா காந்தியை கொலை செய்வதன் மூலம் நாட்டில் குழப்பநிலையை ஏற்படுத்தி நாட்டை இலகுவில் பிளவுபடுத்த சில சக்திகள் முயற்சி செய்தன. ஆனல் திருமதி காந்தியினல் உருவாக்கப்பட்ட இந்திய ஒருமைப்பாட்டு அமைப்பை பிளவுபடுத்த முடியாது என்பதனை நாம் உலகிற்கு சாட்டிவிட்டோம்' என்றும் அவர் தெரிவித்தார்.

## மரணஅறிவித்தல்

### கந்தசாமி சிவசுப்பிரமணியம்

கந்தசாமி சிவசுப்பிரமணியம் (அம்புலி போட்டோ உரிமையாளர், நல்லூர்) அகாலமரணமானர். இவர் நற்குணத்தின் அன்புக் கணவரும், சிவரஞ்சனி, சிவரஞ்சன், சிவராஜினி, சிவதர்சினி, சிவரூபன், சிவரமேஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னரின் பூதவுடல் நல்லூர் கோவில் வீதி, 186ம் இலக்க இல்லத்திலிருந்து இன்று (20-11-84) செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணிக்கு தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும், 815

## மரணஅறிவித்தல்

### A. S. இரத்தினம்

பதுளை அம்பிகா ஸ்ரோஸ் உரிமையாளரும் கந்தர்மடம் வாசியுமாகிய இரத்தினம் காலமானர் அன்னர் இராசமணியின் அன்புக் கணவரும், திருமதி வாசுகி ஸ்ரீகாந்தன் - கௌசலா (பேராதனை பல்கலைக்கழக பொறியியல் மாணவி), சுபாங்கினி, (மாணவி யாழ். இந்துமகளிர் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், நியூரோன் எலக்ரிக்கல் யாழ்ப்பாணம் பங்காளர் ஸ்ரீகாந்தன் அவர்களின் மாமனரும் திருவாளர்கள் A. S. துரைராசா, A. S. பொன்னம்பலம், திருமதி இராசம்மா இராமச்சந்திரன், திருமதி நல்லம்மா கதிர்காமத்தம்பி ஆகியோரின் சகோதரரும் செல்வன் ரேஷன் ஸ்ரீகாந்தனின் பேரனுமாவார். அன்னரின் பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 28/37, கந்தர்மடம் மணல்தறை ஒழுங்கை இல்லத்திலிருந்து 20-11-84 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-00 மணிக்கு கோக்குவில் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உற்ருர், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 814

## படுகொலை

(கிளிநொச்சி)

மதுபோதையில் இருந்த மருமகன் ஒருவர் மாமனரை மண்வெட்டியால் தாக்கியதில் அவர் பலியானர்.

மயிலபுரம் சந்தியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் செல்லன் சுப்பன் (53 வயது) என்பவரே பலியானவராவார்.

இச் சம்பவம்தொடர்பாக மருமகன் செல்லையா சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## டிசம்பரில் வெளிவாரிப் பட்டப்பரீட்சை

(கோப்பாய்)

பேராதனைப் பல்கலைக்கழகத்தினல் வெளிவாரிப் பரீட்சார்த்திகளிற்காக நடத்தப்படும் பட்ட இறுதிப் பரீட்சைகள் டிசம்பர் மாதம் 10-ம் திகதி தொடக்கம் நடைபெறும்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தினல் நடத்தப்படும் 1984-ம் ஆண்டுக்கான கலைமாணிப்பட்டத் தேர்வு, விஞ்ஞானமாணிப் பட்டத்தேர்வு என்பன டிசம்பர் மாதம் 10-ம் திகதி தொடக்கம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

வடபகுதிப் பரீட்சார்த்திகளின் வசதிகருதி வழமைபோல யாழ்ப்பாணத்திலும் பரீட்சை நடைபெறும்.

## இன்று வேட்பு மனு தாக்கல்

(சென்னை)

தமிழ்நாட்டில் லோகசபை, சட்டசபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வது இன்று ஆரம்பமாகிறது.

வேட்பு மனுக்கள் இம்மாதம் 27-ம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

தமிழ்நாட்டில் இந்தப் பொதுத்தேர்தலில் 3 கோடி 80 லட்சத்து 55 ஆயிரத்து 943 பேர் வாக்களிக்கின்றனர்.

## பெற்றேல்

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

ஞர்கள் அங்கிருந்த நான்கு ஊழியர்களையும் துப்பாக்கி முனையில் பயமுறுத்தி 63,000 ரூபா பணத்தையும், வேறுபல பொருட்களையும் கொள்ளையடித்துக் கொண்டு வானென்றில் தப்பிச் சென்வி விட்டனராம்.

இது தொடர்பாக அக்கரைப்பற்று பொலிஸார் புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய தபாலகம்

(சுண்டிக்குளி)

யாழ். கடற்கரை வீதியில் அமைந்துள்ள மதுவரி அலுவலகத்தில் புதிய தபாலகம் ஒன்று திறப்பதற்கு யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதுசம்பந்தமாக அவர் யாழ் தபால் அத்தியட்சகரிடம் தொடர்பு கொண்டதையடுத்துத் திணைக்களக் கட்டிடம் தபால் பகுதியினருக்கு உடனடியாகக் கையளிக்கப்பட்டுள்ளது. பாதுகாப்புக் கருதிப் புதிதாகத் திறக்குப் இத்தபாலகத்தில் அதிவிலையுயர்ந்த முத்திரைகள் விற்பனை செய்வதோடு மணியோடர் போன்ற அத்தியாவசிய சேவைகளும் இங்கு இடம் பெறும்.

## வரிப்பணம்

(1ம்பக்கம்4ம்கலத்தொடர்ச்சி)

கொள்ளை யடிக்கப்பட்டுள்ளது

நேற்றுக்காலை 10 மணியளவில், யழ் பொது நூலகத்துக்கண்மையில் இச்சம்பவம் நடந்தது.

யாழ். நகரிலுள்ள ஒரு தியேட்டரிலிருந்து இப்பணம் வசூலிக்கப்பட்டு வந்த பொழுதே கொள்ளை அடிக்கப்பட்டதாக யாழ் பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது- (மா)

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம் ஆண்டு நவம்பர் மாதம் 20-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.